# ..ரத மணி


..ஞ்
..ீ

விலை அணா 4

348

FEBRUARY
1944




மந்திர பிரவீண ஏ. வி. ராமநாதன்


THE BHARATA MANI, MADRAS.

EDITOR : K.S VENKATARAMANI.



# “அவனுடைய பலம் எங்கிருந்து வருகிறது?”

இதர ஸ்திரீகள் தன்னுடைய குழந்தையைப் பற்றி புகழ்ந்து பேசும்போது தாய்மார்களுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டா கிறது. தங்கள் குழந்தைகள் தேக ஆரோக்கியமாக இருக்க அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிரமம் மெச்சக் கூடியது. போ திய பலம் இல்லாத குழந்தைகள் சீக்கிரம் சக்தியை இழந்து ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்ளுகிருர்கள்.

உங்களுடைய குழந்தைகளுக்கு விடமின் கூடினதும், போஷாக் கை அளிக்க வல்லதுமான ஆகாரத்தைக் கொடுப்பது அத்தியா வசியம். இந்த சமயத்தில் தான் விடமின் சேர்ந்த டால்டா நன்கு உதவுகிறது டால்டாவினுல் ஆகாரத்திற்கு சேர்க்கப்படும் விடமினும், ரக்ஷண சக்தியும் தான் பலத்திற்கும், ஆரோக் கியத்திற்கும் காரணம். குடும்பத்திலுள்ளவர்களுக்கு பலம் அவசிய மாகையால் வேண்டிய ஆகாரங்களை டால்டா வினுல் சமையல் செய்யுங்கள்.



*விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . .*

*விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினுல் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினுல் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.*




## விடமின் சேர்ந்த டால்டா

தாவர எண்ணெயால் தயார் செய்யப் பட்டதென்று உத்திரவாத முள்ளது— சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 20-18 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY





மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

| | | |
|---|---|---|
| மாலை 11 | **FEBRUARY 1944** : சுபானு௵ மாசி௴ | முத்து 2 |


## பொருளடக்கம்


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அபிநவ திரிசங்கு | கௌண்டின்யன் | 33 |
| 2. | என் தந்தை | ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ ஆர். ஸ்ரீநிவாசன் | 38 |
| 3. | ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள் | ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல். | 41 |
| 4. | ஓர் உத்தியோகக் கவி | பி. ஸ்ரீ. | 44 |
| 5. | போகிற போக்கில் | மணி | 46 |
| 6. | சாந்தி | சூர்யதாஸன் | 49 |
| 7. | போனது போல் வந்தான் புது மாப்பிள்ளை | திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 59 |
| 8. | வேண்டுதலை | வே. ரா. சந்தரராமன், எம். ஏ. | 63 |
| 9. | சிலாசாஸனம் | எம். என். ரங்காச்சாரி, எம். ஏ., எம். எல். | 68 |
| 10. | ஒப்பந்தம் | ல. ரா. விசுவநாத சர்மா | 69 |
| 11. | என் விடுமுறை வைபவம் | ஆர். வி. எஸ். மணி | 70 |
| 12. | புஸ்தக விமர்சனம் | | 72 |


"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# குழந்தைகளுக்கு ஆரோக்யம் அளிக்கிறது

ஏதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம் பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினால் ஏற்பட்ட தாங்கொணாத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியான சிகித்சை செய்வதோடு, மேற் கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களிடம் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டில் வைத்திருங்கள்.

# கிரைப் சிரப்

கவர்ன்மெண்டு இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லேபரடரி, மல்லேசுவரம், பெங்களூர்.

ஏஜண்டுகள் :—மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்.,
தபால் பெட்டி 63, மதராஸ்

# அபிநவ் திரிசங்கு

[கௌண்டின்யன்]

நமது மறுமலர்ச்சி எழுத்தாளர்களிடையே புதுமெருகு, ஜோடனை, பண்பாடு என்ற பதங்கள் விசேஷமாக வழங்கிவருவது வாசகர்களுக்குத் தெரிந்த விஷயமே. அவர்கள் கற்பனைகளும் அனேகமாகப் புதுமெருகு என்னும் இனத்தைச் சேர்ந்தவைதான். பழைய காலத்தவர் கையாண்ட கலைகளின் மேன்மையை எடுத்துக் காட்டும் வகையில் அவர்களுடைய கற்பனைகளைக் காலத்துக்குத் தகுந்தபடி மாற்றி, மூக்குக் காது வைத்துச் செப்பனிட்டுப் "பார்த்தீர்களா இதன் அழகை? இதுதான் கபிலர் பாடியது, கம்பர் களி கூறியது, ஒளவை அறைகூவியது. இதைக் கண்டு ஏன் பயந்தோடுகிறீர்கள்? ஐந்து வயதுக்குழந்தையும் ஆண்டனுபவிக்கும். தினுசில் இதை ஒக்கப் பண்ணின எங்கள் சாமர்த்தியத்தை மெச்சுங்கள்" என்பதுதான் தற்காலத்துத் தமிழ்ப் பெரியாரின் பெருமை. இந்தப் புதுமெருகு ஒவ்வொரு சமயங்களில் விபரீதமாக முடிகிறதென்பது வாஸ்தவமே. ஆனால் அதுவும் காலத்துக்குத் தகுந்த கோலம் தானே. அறுபது வயதுக் கிழவிகள் பதினாறு வயது மங்கைகள் போல அலங்கரித்துக் கொள்வதும், நமது தேவஸ்தான அதிகாரிகள் விலைமதிக்க முடியாத சிற்பச்செல்வம் நிறைந்த கோவில்களில் அரை அங்குல கனம் சுண்ணம் படித்துப் புதுப்பிப்பதும் நாம் எங்கும் காண்கிறோமல்லவா?

மேற்படி ஒழுங்கில் புராணக் கதையொன்றைத் தயாரித்துக் குஜராத்துத் தேசத்தவரும் தற்காலம் அமெரிக்காவில் வாசஞ் செய்து இந்தியாவைப் பற்றிப் பல நூல்கள் இயற்றிக் கியாதி பெற்று வருபவருமான கிருஷ்ணலால் ஸ்ரீதரானி என்பவர் சமீபத்தில் பிரசுரித்துள்ள புஸ்தகம் ஒன்றில் தந்திருக்கிறார். உங்களுக்கெல்லாம் திரிசங்குவின் சரித்திரம் தெரியுமல்லவா? இந்தச் சூரியவம்சத்தரசன் இப்பூத உடலுடனே சொர்க்கத்திற்குப் போக எண்ணி தன் குலகுரு வஸிஷ்டரைப் பிரார்த்தித்ததும், அவர் அது இயலாதென்று சொல்ல, குருபுத்திரர்களிடம் சென்று மறுபடி யாசித்ததும், அவர்கள் குருவின் ஆணையை மீறிய சீடன் சண்டாளனாகக் கடவது என்று அவனைச் சபித்ததும், அந்த அவமானத்தையும் மேற்கொண்டு அவன் விசுவாமித்திரரிடம் முறையிட்டதும், அவர் அவனுக்கு அபயம் கொடுத்து அவனை உயிருடன் சொர்க்கமனுப்ப பெரிய யாகம் செய்ய, தேவர்கள் அவிர்பாகம் வாங்க வராதது கண்டு சினந்து, "திரிசங்கு, அஞ்சவேண்டாம், இந்த தேவப்பதர்கள் தயவில்லாமலே என் தபோபலத்தாலே உன்னை இதோ சொர்க்கமேற்றப் போகிறேன். செல் மேலே" என்று சொல்ல, அவன் விண்ணுலகை எய்தினதும், இதைக் கண்டு "சண்டாளனுக்கிங்கென்ன வேலை?" என்று இந்திரன் அவனைத் தலைகீழாக 'கல்தா'க்கொடுத்ததும், அவன் விழுந்துகொண்டே முறையிடுவதைக் கேட்ட விசுவாமித்திரர் கடுங்கோபம் கொண்டு 'நில்லங்கேயே' என்று தன் தபசின் மகிமையால் ஆகாசத்திற்கும் பூமிக்கும் நடுவே நிறுத்தி "வேறு இந்திரனையும் சொர்க்கங்களையும் இப்பொழுதே நிர்மாணித்து

இந்தத் தேவதைகளின் கொட்டத்தை அடக்குகிறேன்" என்று கர்ஜித்து அந்த வேலையில் தலைப்பட்டுச் சூரிய கதிக்குத் தென்புறம் இப்பொழுதும் காணப்படும் நக்ஷத்திர மண்டலங்களைச் சடசடவென்று சிருஷ்டிக்க, இதைக் கண்டு பிரும்மா முதலானவர்கள் அவரிடம் வந்து நயமான வார்த்தைகள் சொல்லி அவர் கோபத்தை அடக்கி, திரிசங்குவும் உலகமுள்ள வரையில் தான் தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருக்கும் இடத்தையே சொர்க்கமாகக் கொண்டு அழியாப்புகழ் பெறட்டுமென்று ஆசீர்வதித்து இந்தப் பெருந் தகராற்றை ஒருவிதமாகத் தீர்த்தார்கள் என்பது ராமாயணம் முதலிய தொன் னூல்கள் வாயிலாக உலகமறிந்தது. இந்தப் பழங்கதையில் இரண்டொரு அம்சங்கள் நம் ஸ்ரீதாரணிக்குப் பிடிக்கவில்லை போலும். அவர் அவைகளை உசிதமாக மாற்றியிருக்கிறார். எப்படியென்றால், திரிசங்கு சொர்க்கம் சென்றபோது இந்திராதிகள் முதலில் ஆக்ஷேபிக்கவில்லையாம். அவனும் சிலகாலம் அங்கே தங்கி தேவ போகங்களை அனுபவித்தான். ஆனால் நாளடைவிலே அவன் சகவாசம் தேவதைகளுக்குப் புளித்துப் போய்விட்டது போலும். எனவே அவனைத் திரும்ப ஊருக்கு அனுப்பிவிட்டார்கள். இதுவரை சும்மாவிருந்த வஸிஷ்டர் இப்பொழுது குறுக்கிட்டார். "தேவர்களுடன் சரிசமானமாகப் பழகினவன் திரும்ப மண்ணுலகு வந்து மானிடருடன் கலப்பது பாங்கன்று" என்று எண்ணிப் பாதி வழி வந்தவனை "அங்கேயே நில்" என்று ஸ்தம்பனம் செய்துவிட்டாராம். அவனும் வழியில்லாமல் அங்கேயே அன்றுமுதல் இன்றுவரை நிற்கிறான் என்று நவீன திரிசங்கு புராணத்தை ஸ்ரீதாரணி ஒருவிதமாக முடிக்கிறார்.

கதை யெப்படியாவது போகட்டும், கருத்தைக் கவனிப்போம். வாஸ்தவத்திலேயே வஸிஷ்டர் அப்படி எண்ணினாரோ எண்ணவில்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் நம் ஸ்ரீதாரணி சொல்லியபடியே அவர் எண்ணியிருந்தால் அது முற்றிலும் ஏற்கக்கூடியதே: வஸிஷ்டர் பரம கருணாநிதி, மகா ஞானி, லோகானுபவம் மிகவும் வாய்ந்தவர். அப்பேர்ப்பட்ட பெரியார் தேவர்களுடன் கலந்த மனிதன் திரும்ப மனிதவர்க்கத்தில் சேர முயன்றால் அது எல்லோருக்கும் உபத்திரவம் தான் விளைக்கும் என்று எண்ணுவது இயல்புதானே. நம்மைப்போன்ற பாமரர்கள் சொர்க்கத்தைப் பற்றியும் தேவலோக வாழ்க்கையைப் பற்றியும் வெகுநாளைப் பழக்க முள்ளவர்கள்போல் பேசமுடியாதுதான். ஆயினுமென்ன? மனித சமூகத்திற்குள்ளேயே, தேவர்கள், மனிதர்கள், கேவலம் ஜந்துக்கள் என்ற பிரிவுகள் இல்லையா? சில உதாரணங்களைக்கொண்டு விவரிப்போம். சொற்ப அந்தஸ்துள்ள ஒருவர் உத்தியோகத்திலோ வியாபாரத்திலோ மிக்கத் தேர்ச்சி பெற்று அதிர்ஷ்டமும் கைகூடி சில வருஷங்களில் ஏராள திரவியம் சம்பாதிக்கிறார். அதற்கறிகுறியாக ஒரு மோட்டார் வண்டியும் வாங்குகிறார். அவ்வளவுதான். அந்தப்புஷ்பக விமானத்தில் ஏறியதும் யக்ஷ கின்னர கந்தர்வர்களுக்குச் சமதையடைந்து விடுகிறார். கால் நடையாய் தினம் பத்து மைல் வேணுமானாலும் முடையிருந்தால் சென்று கொண்டிருந்த இவருக்கு இப்பொழுது அடுத்த தெருவில் இருக்கும் தன் பெண்ணைப் பார்க்க வேணுமென்றால் காரில்லாமல் சரிப்படுகிறதில்லை. டிராம்களிலும், பஸ்ஸுகளிலும் புளியடைத்தாப்போல் நெருக்கப்பட்டு அவஸ்தைப்படும் ஜனங்களைச் சொந்த மோட்டாரில் செல்லும் இப்புது கனவான் ஒருவேளை ஏறிட்டுப் பார்த்தாலும் அவர்கள் தன் இனத்தைச் சேர்ந்தவராகவே அவருக்குப் படுவதில்லை. அதுபோலவே ரஸ்தாவில் நடந்து செல்லும் ஜனங்களுக்கு அங்கே என்ன வேலை என்ற ஆத்திரக் கேள்வி தான் அவர் வண்டியில் போகும் போதெல்லாம் மனதில் எழும். பக்கத்

இல் நம்மைப்போல் யாராவது ஒரு நாடோடி தற்செயலாய் இருக்கும் பக்ஷத்தில் மூஞ்சியைச் சுளுக்கிக் கொண்டு “இந்த பிடெஸ்டிரியன்ஸ் (கால்நடைப் பிரயாணிகள்) எப்போதும் இப்படித்தான், ஸார், ரோடு தங்களுக்குச் சொந்தம் போலல்லவா நடக்கிறார்கள்! ஊரில் கேள்வி முறையில்லை. போலீஸ்காரன் எங்கே தூங்குகிறானோ” என்றெல்லாம் கசந்து பேசுவார். இப்படிப்பட்ட மனுஷனுக்குக் காலசக்கிரம் சுழலுவதாலோ மகாயுத்தத்தின் சில்லரை விளைவுகளில் ஒன்றான எண்ணெய்ப் பஞ்சத்தாலோ மோட்டார் வைத்துக் கொள்ள முடியாமல் போய்விடுகிறதென்று வைத்துக் கொள்ளுவோம். என்ன பாடுபடுகிறார் தெரியுமா? தொழிலோ செய்தாக வேணும், வீட்டில் அடங்கிக் கிடக்கமுடியாது. பத்தடி கூடக் கால்நடையாய்ப் போகக் கூடாது என்ற அந்தஸ்துக் கொண்டாடும் நமது நகரவாசிகள் கண் முன்னே தெருவில் எப்படி நடப்பது? பஸ்ஸிலோ டிராமிலோ ஏறுவோமென்றாலோ, அது இதைவிட மானக்கேடாக இருக்கிறது. கொஞ்ச காலம் பழக்கம் விட்டிருந்தபடியால் ஓடும் வண்டியில் ஏறுவது, ஒற்றைக்காலில் புட்போர்ட்டில் அடுத்தவன் பூட்ஸால் செரிப்பதையும் சகித்துக்கொண்டு தபசு பண்ணுவது முதலிய வித்தைகள் மறந்து போயின. ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு ஏறி உள்ளே சென்றால் ‘இழவு’ விசாரிப்பவர்கள் பல பேர். பல வருஷங்கள் டிராமில் கம்பி பிடித்துத் தொங்கும் வௌவால் வர்க்கத்தில் தன்னுடன் சேர்ந்திருந்த ஒருவர், அரைச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு “என்ன, ஸார், கார் எங்கே? ரிபேரா?” என்று பரிந்து கேட்கிறார். “ஆமாம்” என்று சொல்லி இந்தச் சனியனை விலக்கலாமாவென்றால், இந்தச் சால்ஜாப்பு எத்தனை நாளைக்குச் சொல்லமுடியும்? “கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள்” என்பார்கள். ஒன்றும் பதில் சொல்லாமல் வண்டிச் சத்தத்தில் காதில் விழாதது போல் இருந்துவிடலாமென்று யோசித்தால், இன்னொரு குறும்பன் ஆரம்பிக்கிறான். “இப்போதான் பெட்ரோல்பாடு பெரும்பாடாயிட்டுதே, வெகுநாளாய் மோட்டார் ஸவாரி பண்ணினவாள்ளாம்கூட நம்மோடே போட்டிப் போட ஆரம்பிச்சுட்டா. கேக்கணுமா இந்தக் கம்பெனிக்காரன்களுக்கு? கண்ணை மூடிண்டு சார்ஜை ஏத்திப்பிடுகிறான்கள்” என்று எடுக்கவும் நல்லவேளையாகக் கம்பெனியைப் பற்றிப் புகார் சொல்லும் ருசிகரமான விஷயத்தில் எல்லோரும் ஈடுபடுகிறார்கள். நமது மாஜி பெரிய மனுஷரும் “இன்றைக் கூட்டுக்கு இத்துடன் ஆயிற்றே, அதுவரையில் நல்ல காலம் தான்” என்று தனக்குள் எண்ணிக் கொண்டு தெரிந்தவர் யாரும் தன்னைக் கவனியாதபடி மேட்டு வளையையோ வெளியே காணப்படும் காக்ஷிகளையோ மும்முரமாகக் கவனிப்பவர்போல் பாவனைசெய்து இறங்குமிடம் எங்கே வரப் போகிறது என்று ஆவலுடன் காத்திருப்பார். இப்படி ஒவ்வொரு பிரயாணமும் ‘யமவாதனை’யாக முடியும். சொற்பக்காலம் மோட்டார் ஏறின வைபவத்தின் பலனைப் பார்த்தீர்களா?

இவ்வித லஜ்ஜை மோட்டார் யோகம் சொர்ப்பனுவஸ்தையாக மாறின ஒரு சிலரை மட்டும் பாதிக்கிறதென்றெண்ண வேண்டாம். எவ்வித அந்தஸ்துள்ளவர்களாயிருந்தாலும் செய்யாததைச் செய்ய நேர்ந்தால் அது துக்கத்திற்காளாக்குகிறது. மாதச் சம்பளம் வாங்கிப் பிழைக்கும் பெரும்பாலார் வேலையாள் வைத்துக்கொள்ள முடிகிறதில்லை. அன்றாடம் கடைகண்ணிக்குப் போய் வேண்டிய சாமான்களை வீட்டு எஜமானனே தான் வாங்கிச் சுமந்து வருவது வழக்கம். இதில் ஒன்றும் ஈனமாய் நினைப்பதில்லை. பெரும்படியான சாமான்கள், அதாவது, மாதாந்தரத்திற்கு வேண்டிய அரிசி, விறகு முதலியன மட்டும் மொத்தமாய் வாங்கிக் கூலியாள் தலைமேலோ கைவண்டியிலோ ஏற்றி வீட்டிற்குக் கொண்டுவரப்படும். இவ்

களுக்கிப்பொழுது பெரிய உபத்திரவம் நேர்ந்திருக்கிறது. பங்கீடுக் கட்டுப்பாடு கள் வந்தாலும் வந்தன, சுமையாளுக் கும் விறகுடைப்பவனுக்கும் கொண் டாட்டம்தான். ஒன்றுக்கு மூன்றுகூலி கேட்கிறார்கள். இது இப்படியிருக்க, பங்கீடுப் பிரகாரம் அந்தந்த வாரத்துத் தேவையைத்தான் அந்தந்த வாரம் வாங் கிக்கொள்ளலாம். வாரத்திற்குப் பத் துப்படி அரிசி உத்திரவு பெற்ற ஒருவர் கேட்கிறார், "இந்தப் பத்துப்படி அரிசி யை வீட்டுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு ஒரு ஆள் தேடவேண்டி யிருக்கிறது. சுண்டைக்காய் கால்பணம் சுமைகூலி முக்கால் பணமா? வேண்டாம், நாமே தூக்கிச் செல்வோமென்றால்,பத்துப்படி அரிசியைக் கையில் எப்படிக் கொண்டு போவது? மூன்று மாதக்குழந்தை போலல்லவா அது 'கொள கொள' வென்று வழுக்குகிறது? தலையில் மூட் டை சுமந்து வழக்கமில்லை. அந்திகாலத் தில் இந்த அவமானம் வேறு?" இதைக் கேட்ட மற்றொருவர், "அரிசியையாவது ஒருவிதமாய்ச் சமாளிக்கலாம். குத்துப் பையில்போட்டு எக்கில் எடுத்துக் கொண்டு பெரிய போர்வையை போட்டு மூடிக்கொண்டால் அவ்வளவாகத் தெரி யாது. அரை குண்டு விறகை எப்படி, அய்யா, தூக்குகிறது? அதற்கு மோட் டார் ஏறும் அதிர்ஷ்டம் தற்காலம் ஏற் பட்டிருந்தாலும் மார்போடு மார்பாய் அணைக்கும்படியான வஸ்துவில்லையே!" என்று விசனிக்கிறார்.

இவ்விதம் தம்தம் நிலைமையிலிருந்து ஒருபடி கீழே யிறங்குவது துக்கமா யிருக்கத் தோலைக் கடித்துத் துருத்தி யைக் கடித்து வேட்டை நாயானவன் திரும்பவும் பல்போன நாயாகித் தோலைக் கடிப்பதென்றால் அவமானம் வேறு உண்டா? எக்ஸகீடிவ் கௌன் ஸில் மெம்பர் அல்லது ஜட்ஜ் பதவி வகித்த ஒரு பெரிய வக்கீல் திரும்ப வக்கீலாக வந்தால் வரு வாய் பதினாயிரமா யிருந்தாலும் பத்தோடு பதினொன்றுதானே? வெள்ளித் தடிபிடித்தடலாயத்து எதிரே சென்று ஸந்நிதி விலக்க, மூலைக்கு மூலை நிற்கும் பலாகச் சிப்பந்திகளும் விழுந்து விழுந்து சலாம் செய்யப் பவனி வந்த காலம் மாயமாய்ப் பறந்தோடி விட் டதே, உலகமே தலை கீழாய் மாறின தாக அப்பேர்க்கொத்தவர் நினைப்பது ஸகஜம்தானே. இந்த ஹ்ருதய மர் மத்தைக் கண்டுதான் போலும் நமது முன்னோர்கள் ஸ்மசானம்போன பிணம் திரும்ப வீடு வரப்படாதென் றும்,சிதையிலேறியவனுக்கு உயிர்வந்து விட்டால் இரண்டாம் பேருக்குத் தெரி யாமல் ஊரை விட்டு ஓடிக் காசிக்குப் போய்விட வேண்டுமென்று விதித் திருந்தார்கள்போலும். ஆனால் இந்த வைராக்கியங்களெல்லாம் இந்த நாளில் கட்டி வராதுதான். 58 வயதுக்கு (அதாவது ரிகார்டிலுள்ளது—வாஸ்தவ. வயது 60), மூன்று தரம் எக்ஸ்டேன் ஷன் ஆனபிறகு தீராப் பொரியாய் கலெக்டர் பதவியிலிருந்து விலகி உப காரச் சம்பளம் வாங்கும்படியான சிர மம் வந்துவிட்டால், "எப்போடா, அப்பா, பத்து நாளாவது வீட்டிலே அப்பாடான்னு ஒக்காந்திருக்கப் போறோம்!" என்று வாய்க்கு வாய் சொல்லிக்கொண்டிருந்த மனுஷ்யன் ஒரு சிற்றூர் ஜமீனில் திவான் வேலை பெறு வதே சொர்க்கமென்று நினைக்கிறேன் றால், சொந்த வீட்டிலுள்ள அதிகா ரத்தைவிடப் பதின் மடங்கு அதிகாரம் செலுத்திக்கொண்டு ஏதேஷ்டமாகக் குடும்ப விருத்தி செய்வதிலேயே தங் கள் ஊக்கம் முழுவதையும் செலுத்தி வரும் அவருடைய மூன்று மாப் பிள்ளைகளல்லவா அதற்கு ஜவாப்பு? இருந்தாலும் அவருக்கும் மனதுக்குள் குறை குறைதான். என்ன ஆயிரம் கலெக்டர் அமுல் அந்தச் சிற்றூரிலவர் நடத்தினாலும் ஊர்க்குருவி பருந்தாகா தல்லவா?

அடுத்த வீட்டுக்காரனுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் அனேகமாக ஒருவனுக்கு உண்டாகும் மனத் தளர்ச் சிக்கும், வேதனைக்கும் காரணமாகிறது. இது அவிவேகமென்று ஒருவிதமாக

மனதைத் திடப்படுத்திக்கொள்வோரும் கூட உலகப் போக்கை எதிர்க்கமுடிகிறதில்லை. "கருவாடு தின்றவன் பெரு வாழ்வு வாழ்கிறான், மரக்கறி தின்றவன் செருப்படி படுகிறான்", "வாழ்ந்தவன் கெட்டால் வரையோட்டுக்கு மாகாது" என்றெல்லாம் வழங்கும் பழமொழிகள் தொன்றுதொட்டுவரும் ஜனசமூகத்தின் மனப்பான்மையை விளக்குகின்றன. அந்தஸ்துக் குறைந்தவன் தான் இழந்ததை நினைத்து வருந்துகிறானேயொழிய தனக்கும் குறைந்தவர்களாயும் தன்னைக் கண்டு அசூயைப்படுபவர்களுமான பலர் இருப்பதை நினைத்து ஆறுதல் அடைகிறதில்லை. இவர்கள் தன்னைப் பற்றி 'அகம்பிடித்தவன்', 'வறட்டு ஜம்பம்' என்றெல்லாம் ஏளனமாகவும், அலக்ஷியமாகவும் பேசுவதாக எண்ணி அருவருப்படைந்தாலும் அதையாவது பொறுத்துக் கொள்ளலாம்போலிருக்கிறது, தன்னுடன் சரிசமானமாகப் பழகினவர்கள் இப்பொழுது தான் ஒருவன் இருப்பதையே மறந்துவிட்டதுபோல் நடிப்பதைக் காணும்போது. குஞ்சும் குளுவானும் பெரிய பரிவாரமாகப் போராற்றில் நீந்தி விளையாடும் மீன்களுக்கிடையே பெரிய மீனொன்றை முதலை பற்றியிழுத்தால், மீன் கூட்டம் ஒரு நிமிஷம் கலக்கமுற்றுச் சிதறுகிறதும் அடுத்த நிமிஷம் ஒன்றுசேர்ந்து யாதொரு விபத்தும் நேரிடாததுபோல் உல்லாஸமாய்ச் செல்வதும் நாம் பார்த்திருக்கிறோம். அந்த ஒரு நிமிஷக் கலக்கங்கூடப் பெரிய மனித கோஷ்டியின் இடையே காணப்படுவதில்லை, அதிர்ஷ்டமென்கிற முதலை அக்கூட்டத்திலிருந்து ஒருவனைக் காலைப்பற்றித் தண்ணிக்குள் அமுக்கிவிட்டால். அப்படி ஒருவன் இருந்தான் என்கிற ஞாபகமே அழிபட்டுப்போகிறது. க்ளப்பிலாகட்டும், பீச்சிலாகட்டும், இண்டியிலாகட்டும் இணைபிரியாது உடன்பிறந்தவர்களைவிட அதிக உறவாய்ப் பழகிய இருவரில் ஒருவன் கஷ்ட காலவசத்தால் இன்ஸால்வென்ஸி பெடிஷன் போடும்படியாகிவிட்டதென்று வைத்துக்கொள்ளுவோம், அடுத்த நிமிஷம் இந்தப் பிராண ஸ்நேகிதன் முகமறியாதவனாக மாறிவிடுகிறான். தப்பித்தவறி எங்கேயாவது சந்திக்கும்படி நேர்ந்துவிட்டால் அடுத்த பக்கம் பார்த்துக்கொண்டு ஏதோ அவசர அலுவல் இருப்பதுபோல் வெகு வேகமாக நடக்கிறான். மற்றவன் பேச்சை யாராவது அவனிடமெடுத்தால் அனுதாபம் காட்டும் தினுசில் ஏதோ அரைவார்த்தை சொல்லி உடனே பேச்சை மாற்றும் தோரணையிலிருந்தே இங்கிதந் தெரிந்த எதிராளி விஷயம் எப்படியிருக்கிறதென்று நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். சிநேகிதர்கள் பாடு இப்படியிருக்க உற்றார் உறவினர் செய்தி கேட்கவும்வேணுமா? ஐம்பதினாயிரம் ரூபாய் சீருடன் தன் அருமை மகளைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தவன் அவள் கணவன் வீட்டிற்குச் சென்றால், மாப்பிள்ளை 'வா' வென்றுகூட அழைப்பதில்லை. சிப்பந்திகளைப் பற்றிச் சொல்லுவானேன்? கைகட்டி வாய்பொத்தித் தடுக்குப் போட்டு நின்றவனெல்லாம், "அண்ணா, பொடி வெச்சிருக்கேளா?" என்று கேட்க ஆரம்பித்து விடுகிறான்.

எல்லோரும் செத்தால் கலியாணமென்பார்கள். வாழ்க்கையில் மேலே ஏறுவதும் கீழே யிறங்குவதும் தனியே நேர்ந்தால் கசப்பூட்டும். அவ்விதக் கேடு வெகு பேருக்குமுண்டால் துக்கம் குறைவதோடு ஒருவித உற்சாகம்கூட ஏற்படுகிறது. முப்பது வருஷத்திற்கு முன் சென்னையில் வக்கீல்கள் டிராம் வண்டியில் போவதை யாராவது பார்த்ததுண்டா, அல்லது அத்தொழிலில் ஈடுபட்டவர்கள் ஒண்டிக் குடியிருந்ததாகக் கேள்வியாவது உண்டா? காலம் எப்படி மாறிவிட்டது பாருங்கள்! இழுக் குதிரை இழுக்கும் பழைய விக்டோரியாவில் எட்டுப்பேர் ஒருவர்மேல் ஒருவர் இடித்து உட்கார்ந்துகொண்டு ஹைகோர்ட்டுக்குப் போனகாலம் போக பஸ்ஸில் தாங்களும், தங்கள் கேஸ் வைக்கும் பெட்டிகளும், தங்கள் கிழிந்த கேஸ் கட்டுக்களும், தங்கள் குமாஸ்தாக்

# என் தந்தை

## ராஜமந்திர பிரவீண ஏ. வி. ராமநாதன்

[ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ, ஆர். ஸ்ரீநிவாஸன்]

கம்பீரத் தோற்றம். பரந்த முகம். அகன்ற நெற்றி. நெற்றியில் துலங்கும் துல்ய விபூதிபட்டை, அதன் நடுவில், அம்பாள் பிரசாதமான அழகிய குங்குமப் பொட்டு. உதட்டினிடையில் தவழும் இளநகை. இவர்தான் என் அருமைத் தந்தை ?

ஓயாத உழைப்பாளி. அறிவுக் களஞ்சியமான என் தந்தை எடுத்த காரியத்தை அல்லும் பகலும், ஊணுறக்கமின்றி உழைத்தாவது முடிக்கும் ஆற்றலுடையவர். முகத்தில் புன்முறுவல் தவழும். ஆனால் மூளையோ வேலையொன்றை நிறைவேற்றுவதற்கான திட்டம் போட்டவண்ணமிருக்கும். ஸ்படிக தடாகத்தின் தெள்ளத் தெளிந்த நிர்மல ஜலத்தைப் போன்ற பரிசுத்தமான உள்ளம். அவர் உள்ளத்தை ஒரு சிறு குழந்தையின் உள்ளத்திற்கு ஒப்பிடலாம்.

அந்தப் பரிசுத்த உள்ளத்தில் தாராள குணம் நிறைந்து பொங்கும். "பொன் வைக்குமிடத்தில் பூவைப்பது" என்பதற்கு மாறாக "பூவைக்குமிடத்தில் பொன்"தான் வைப்பார். இல்லையென்றவற்கு பணத்தை வாரித் தாராளமாக வழங்குவார். எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து, எங்கள் அகம் ஒரு அன்ன சத்திரம் போல்தான் விளங்கும். இவர் ஆதரவில் படித்து முன்னுக்கு வந்த ஏழை மாணவர்கள் பலருளர். இத்தகையவர்களில் தற்சமயம் ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கும் பெரிய உத்தியோகஸ்தர்களுமுண்டு, குமாஸ்தாக்களுமுண்டு, வக்கீல்களுமுண்டு.

எங்கள் குடும்பமோ நிறைந்ததொரு பெரிய குடும்பம். என் பாட்டனார் சேலம் ஜில்லாவில் திருப்பத்தூரில் சில வருஷங்களும், பிறகு தர்மபுரியில் சில வருஷங்களும் வக்கீல் தொழிலை நடத்தி வந்தார். அவர் சிறு பிராயத்திலேயே காலஞ்சென்றுவிட்டார். அவருக்கு என் தந்தைதான் மூத்த குமாரர். என் தகப்பனாருடன் கூடப் பிறந்தவர்கள் நான்கு தங்கைமார்களும், இரண்டு தம்பிமார்களுமுண்டு. சாக்ஷாத் சீதாபிராட்டியார் போலவே அதே பெயர் கொண்ட என் தாயாரும் என் தந்தைக்குச் சகல விதத்திலும் உதவியாக விருந்து அவருக்கு வலக்கை போலுள்ளவர். "ஆனந்தா" (என் தகப்பனாரின் இல்லத்தின் பெயர்) கலியாண வீடுபோல் எப்பொழுதும் ஒரே ஆனந்த கோலாகலத்துடன் விளங்குகிறது.

என் தகப்பனார் பிறந்த ஊர் பவானி. என் பாட்டனார் ஊர் ஆப்பக்குடல். சென்னை கிறிஸ்தியன் காலேஜில் 1907-ல் பி.ஏ. பட்டம்பெற்று, எம்.ஏ. பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டே, அதனுடன் கூடவே மைசூர் சிவில் சர்வீஸ் காம்பெடிஷன் பரீக்ஷைக்கும் படித்து, சிறப்புடன் தேறிவிட்டார். அப்பொழுதிலிருந்து மைசூர் அரசாங்கத்தில், போலீஸ், வருமானம், சட்டம், தொழில் கலால், செக்ரிடேரியட்போன்ற எல்லா

---

களுமாகப் பிறருக்கிடமில்லாமல் அடைத்துக்கொண்டு, நடுவழியில் வண்டியை நிறுத்தப்படாதென்று கண்டக்டருக்கு இவர்கள் பண்ணும் கடுமையான உத்திரவைப் பார்த்தால், 'ஸங்கே சக்தி கலௌ யுகே' என்ற ஆன்றோர் வாக்குக்குப் புது அர்த்தமல்லவா தோணிக்கிறது?

இலாகாக்களிலும் வஞ்சனையின்றி உழைத்தார். மைசூர் சம்ஸ்தானத்தில் கிராமாபிவிருத்தி, ஆரோக்கியம், ஹரிஜன சேவை முதலியதிலிருந்து தொழிலாளர் சட்ட திட்டம், யுத்தத் தொழில், சிவில் பாதுகாப்பு, நகரப் பாதுகாப்பு, தொழில், ஏ. ஆர். பி., உஷார்க் கமிட்டி போன்ற புதுப்புதுத் திட்டங்களையும் திருவித்துப் பலதுறையிலும் உழைத்து எண்ணிறந்த சேவைகள் புரிந்துள்ளார். மைசூர் காகித தொழிற்சாலை, மைசூர் சிமெண்ட் தொழிற்சாலை, மைசூர் சர்க்கரைத் தொழிற்சாலை முதலியன மைசூர் சம்ஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பொழுது என் தந்தைதான் அபிவிருத்தி இலாகா கமிஷனராகவிருந்தார். எக்காரியத்தைத் தொடங்கினாலும் அது நிறைவேறும் வரைக்கும் சிரத்தையுடனும், நியம நிஷ்டையுடனும் உழைக்கும் ஊக்கமுள்ளவர். அடடா! அதென்ன உழைப்பு உழைப்பார்! பலநாள் வீட்டிற்கே வரமாட்டார். ஆபீஸிற்கே சாப்பாடு அனுப்பச் சொல்லிவிடுவார். ஸ்நானம், பானம், தூக்கம், எல்லாம் ஆபீஸில்தான்.

வேலை மிகவும் அதிகமாக இருக்கும் சமயத்தில் நாங்கள் அவர் எதிரில் நிற்கவே பயப்படுவோம். மோட்டார் வண்டியுடன்கூட அது செல்லும் விசையில் கட்டை வண்டி செல்வது முடியுமா? அவர் குறிப்பறிந்து அவர் மனதிற்குப் பாங்காக விரைவில் வேலை செய்வதற்கு யாருக்கும் சிரமமே.

ரொம்ப கஷ்டப்படுகிறாரே என்று நாம் கூடமாட ஏதாவது ஒத்தாசை செய்வோமே என்றால், அது அவருக்குச் சரிப்படாது. உடனே கடிந்துகொள்வார். எவ்வளவோ அவசர வேலையிருந்தாலுங்கூடத் தன் 'பூட்ஸை' தான் தான் பொறுக்கி எடுத்து அணிய வேண்டும். தன் 'ஷர்ட்'டிற்கு தானே தான் பித்தான் மாற்றிக்கொள்ள வேண்டும். கூஜாவிலிருந்து ஜலத்தைக் கூட நாம் டம்ளரில் கொட்டிக் கொடுக்கப்படாது. ஒருவர் கையையும் எதிர்பார்க்க மாட்டார். இரவு மூன்று மணி வரைக்கும் கண் விழித்து வேலை செய்தாலுங்கூட விடியற்காலம் 5 மணிக்கே (பழைய மணி) துயிலெழுந்து தானே ஜலம் இழுத்துக்கொண்டு ஸ்நானம் செய்து, மடியுடுத்தி (பாராயணம்) பகவன்னாம ஸ்மரணைக்கு உட்காருவார். எவ்வளவோ அவசரகாரியமிருக்கட்டும் அல்லது மார்கழி மாத குளிராய் இருந்தால்கூட அவர் இந்த வழக்கத்தை விடார். காலையில் ஸ்நானமின்றி, பகவன்னாமஸ்மரணையின்றி ஒரு விழுங்கு பால்கூடப் பருகமாட்டார். அதற்கடுத்த கடமை கச்சேரி வேலை. அவர் பாராயணம் செய்யும் சமயத்தில்தான் வீட்டுக் குழந்தைகளையும், உற்றார் உறவினரையும் சாவகாசமாக அருகில் அழைத்து அம்பாள் பிரசாதம் வழங்கி பிரசன்ன முகத்துடன் சம்பாஷிப்பார். அதன் பிறகு பாதிராத்திரி வரைக்கும் அவரை சாவகாசமாகக் காண்பது அரிது. முடுக்கிவிட்ட யந்திரம்போல் ஓய்வு ஒழிச்சலின்றி உழைப்பார். பகவன் நாமஸ்மரணைக்காக அவர் செலவிடும் அந்த அரை மணிக்குள்ளாகவே வாசற்புற தாழ்வாரத்தில் ஏகப்பட்டபேர் வந்து அவரைப் பார்க்கக் காத்திருப்பார்கள். ஒருவர் பாக்கி இல்லாமல் அனைவரையும் சமுகத்துடன் அழைத்து, உபசார மொழிகூறித் தகுந்த விடையளித்து அனுப்புவார். அதற்குள் ஆபீஸ் ரூமில் கட்டுக் கட்டாக 'ஆபீஸ் பைல்கள்' (office files) மலைபோல் குவிந்துவிடும்.

ஏழை எளியவர்களைக் கண்டால் என் தந்தைக்கு வெகு பிரியம். உலாவ செல்கையில் பிச்சைக்காரன் ஒருவனைக் கண்டால் பையில் பணம் இல்லாவிடில், பௌண்டன் பேனாவோ, கடியாரமோ ஏதாவதிருந்தாலும் கூசாமல் கொடுத்துவிட்டு வந்துவிடுவார்.

தெய்வ பக்தியில் அவருக்கு நிகர் எவரும் இடையாது என்றே நான் நினைக்கிறேன். எங்கள் வீட்டில் வரவு செலவு கணக்கு வைப்பதென்னும் வழக்கமே கிடையாது. எப்பொழுதும் ஜேபியில் செக் புத்தகத்தை வைத்துக்கொண்டே

இருப்பார். அதை பிரித்துப் பார்த்தால் தான் தெரியும், மர்மம்! எத்தனை தர்ம ஸ்தாபனங்கள், எத்தனை தேவாலயங்கள், எத்தனை ஏழைக் குடும்பங்கள் நூற்றுக் கணக்கில்தான் பணம் உதவியிருப்பார்!

அப்பாவின் ஓயாத உழைப்பையும், தேச பக்தியையும், ராஜபக்தியையும், பொதுநலச் சேவையையும் மெச்சி மைசூர் மகாராஜாவானவர் 1938-ம் ஆண்டில், "ராஜ சேவா பிரசக்த" என்ற பட்டத்தையும், 1942-ம் ஆண்டில், "ராஜமந்திர பிரவீண" என்ற பட்டத்தையும் வழங்கி மரியாதை செய்தார். நிற்க, பெங்களூர் மிதிக் சொஸைடி, பப்ளிக் லைப்ரரி, செஞ்சுரீ கிளப், மைசூர் சிவில் சர்வீஸ் அசோஸியேஷன் முதலிய பற்பல பொதுநலச் சங்கங்களில் பல்லாண்டு நிர்வாகஸ்தராக இருந்து தொண்டாற்றியுள்ளார். மைசூர் சாரணச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் இதுபோன்ற சங்கங்களில் சிறப்புற சேவை செய்ததற்கு மரியாதைப் பதக்கங்கள் பெற்றுள்ளார். பெங்களூர் தேசீயக் கல்விச் சங்கம், ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமங்களின் ஸ்தாபன காலந்தொட்டு நிர்வாக சபையிலிருந்து கொண்டு தொண்டு புரிந்து வருகிறார். அவருடைய பிரசங்கம் தெள்ளத் தெளிய சௌம்மியமாகவும், நடுநடுவில் வேதாந்த மொழிகளும், சுலோகங்களும், வேடிக்கை வார்த்தைகளும் கோர்க்கப்பட்டு செவிக்கினிமையாகவும், உள்ளத்திற்கோர் அரிய விருந்தாகவுமிருக்கும்.

அப்பாவிற்குச் சம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்தியமுண்டு. ஆனாலும் கூட தற்சமய ஓழிவு கிடைத்தபொழுதெல்லாம் சம்ஸ்கிருத அத்தியயனம் செய்வதில் ஈடுபட்டு விடுவார். என் எழுதுகோலுக்கு ஊக்கமும், பலமும் புகட்டி என்னை எழுத்தாளர் உலகில் கால்வைக்கத் தைரியமூட்டிய என் அருமை தந்தை தற்சமயம் ராஜபுதனவிலிருக்கும் பரத்பூர் சமஸ்தான திவான் பதவியை அலங்கரித்து வருகிறார்.

திறமையுடனும், திடசித்தத்துடனும், சத்தியத்துடனும் உழைக்கும் உழைப்பாளியாகிய என் தந்தையை இறைவன் நீடூழி காலம் காத்தருள்வாராக.



காலஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா பண்டிதராயிருந்த
மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னாகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

# ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள்

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

[1941, அக்டோபர், நவம்பர் 'பாரதமணி' முத்துக்களில் வெளியான "உபோத்காத"த்தின் தொடர்ச்சி.]

## கீர்த்தனை 1

கல்யாணி ராகம் | ஆதி தாளம்

### ஸாஹித்யம்

பல்லவி

தேவி தேஹிமே ஸரஸ்வதி

அனுபல்லவி

தாவ கீன வீணா நிக்வாண ஸத்ருசீம்
சாரு சாரு பதாங்கி ரமீச்வரி

சரணம்

ஞான விக்ஞான ராசி ஸ்வரூபே
தீன ரக்ஷண க்ஷண வீக்ஷணே
ஸநிதபமகரி ஸ்வர சயதோஷிணி
வர யக்ஞ கவயே.

### தாத்பர்யம்

ஸரஸ்வதீ தேவியே, ஈச்வரி, ஆத்மஞான - பௌதிக ஞானங்களின் உருவமே; ஏழைகளைக் காப்பாற்ற ஆர்வமுடைய கடாக்ஷமுடையவளே, ஸ நி த ப ம க ரி என்ற ஸ்வரங்களில் ஸந்தோஷமடைபவளே, அரும் கவியான யக்ஞேச்வரனும் எனக்கு உன் வீணாநாதத்திற்குச் சமமான அழகு மிகுந்த பதங்களமைந்த கவிதையைக் கொடுத்தருள்வாய்.

## கீர்த்தனை 1

கல்யாணி ராகம் | ஆதி தாளம்

குறிப்பு :—மத்யமகால கீர்த்தனமாதலால் மத்யமகால நடைக்கே தாளம் வகுக்கப்பட்டிருக்கிறது—ஆவர்த்தத்திற்கு அக்ஷரம் 16 வீதம்; வழக்கமாயுள்ள 'கமா' (,) முதலிய அடையாளங்களில்லாமல் உயிரெழுத்துக்களே உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பாடும்போது உச்சரிப்பு எவ்விதமோ அவ்விதமே எழுதுவதில் என் நோக்கம்.

## பல்லவி

(1) ஸ ஸநி தா ப | ம பா அ அ ம ம | பா அ தநி
தே விஇ தேவ ஹி | மேஏ எ எ எ ஸ | அர அஸ்வஅ

(2) ஸ அஅ ஷை | ம ப த ப ப ம ம | பாஅ தநி
தி இ இ | மேஎ எ எ எ எ ஸ | ரஅ அஸ்வஅ

(3) ஸா த நி ஸா ஸ நீஇத பாஅம | ஷை ப | த ப த தநி
தி இ இ இ தேவிஇஇதேஎஹி | ஸ | ர அ அ ஸ்வஅ

(4) ஸா த நி ஸா ஷை | பத நீ ஷை | ஷை ஸநி
தி இ இ இ | மேஎ ஏ | ஸ்வஅ

(5) த ப ம ப த நி ஷை | மபதபபம | ம பா அ ரி
தி இ இ இ இ இ
ஸ அஅ

## அநுபல்லவி

(1) ம ப தா த | மத நீ ஸ | நீதபாம க
தா வ கி ன | விஇ ஞ கி | க்வாஅணஅஅ ஸ

(2) ம பா ஷை | தா பதநிஸ ஷை
த்ரு சிம் | வி ஞஅஅ

(1) ஷை ரி ரி ஸாநி | பத நீ ஸா | (நி)தா பாம
சா ரு சாஅரு | பஅ தாம் கி | ர மீஇச்வ

(2) பஅஅ ஷை | ப பதநிஸ ஸநி | இத பாம
ரிஇஇ | ப தஅஅம் கிர | அஅ மீஇச்வ

க ம ப த நி ஸ
ரி இ இ இ இ இ தேவிதேஹிமே

## சரணம்

(1) தத பாஅம க | அ ரி ரி | ஸா ரி க
ஞான விஇஇ ஞ | ர னஅ ரா | சிஇஸ்வ ரு

(2) ம பா கா(நி)தா ஷை | ஷை | ஷை
ஊ பே

(1) ஷை மப தாநி | ஸ அ அ நி | ஸ நீ த
நீன ரஅக்ஷ | ண அ அ க்ஷ | ண வி க்ஷ

(2) மத நீ ஷை | ஷை | ஸரிஸா நீ த
ணோஎ ஏ | ணஅஅ வி க்ஷ

# அமிர்தாஞ்சன் லிமிடெட்

மதராஸ்

பொன் விழா ஞாபகார்த்தமாய் தங்கள் அன்பு மிக்க




ஆசி மொழிகளை எங்களுக்கு அனுப்ப வேண்டுகின்றோம்

அமிர்தாஞ்சன் லிமிடெட்

7, தம்பு செட்டி தெரு, மதராஸ்


மத் ஸிரிஸீ த  ஸ ஸி த ப ம | அ அ அ  க | ரீ இ ஸ
ணௌ எஎவ ஏ  ஸ ஸி த ப ம | அ அ அ  க | ரீ இ ஸ்வ

(1) ரி இ இ  க ம பா ம | ப அ அ  ஸ | ஸ (ரி) தாப
ர அ அ  ச ய தோ ஷி | ணி இ இ  வ | ர யஅக்ஞ

(௨) பம பா  ஷை | ஷை | ஸிரிஸீ ஸீத
கவ பே  |  | ரஅஅ யஅக்ஞ

பம பதஸிஸ
கவ யேஎஎ  தேவிதேஹிமே.

# ஓர் உத்தியோகக் கவி

[பி. ஸ்ரீ]

பழைய தலைமுறையில் சர்க்கார் உத்தியோகத்திற்கு எவ்வளவோ மதிப்பு இருந்தது. அந்த மதிப்பை இக்காலத்திலுள்ள இளைஞர்கள் ஊகித்துப் பார்ப்பதுகூடக் கொஞ்சம் சிரமமான காரியம்தான்.

ஏன்? அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பிரத்தியட்ச தெய்வங்களாகக் காட்சி தந்த காலம் அது. மகா விஷ்ணுவை உறங்கும் பெருமாள் என்று நம்பிய வைஷ்ணவர்கள் அரசாங்க அதிகாரியை உலாவும் பெருமாள் என்று வழிபட்ட காலம். சைவர்களும் சிவத்தை மறந்து, நடமாடும் கோவில்களாக உத்தியோகஸ்தர்களைப் போற்றிவந்த காலம்.

வெள்ளைத் துரைகள் பெருந்தெய்வங்களென்றால், கருந்துரைகள் - அதாவது உத்தியோகத்திலுள்ள நம்மவர்கள் - சிறு தெய்வங்களாகக் கருதப்பட்டனர். சிறு தெய்வங்களென்றால், வீரபத்திரக் கடவுள் முதல் சுடலை மாடசாமி வரையுள்ள தெய்வ வர்க்கம் என்று பொருள். பெருந் தெய்வங்களான சிவன், விஷ்ணு முதலானவர்களைக் காட்டிலும் சில சமயங்களில் நமது ஜனங்கள் சிறு தெய்வங்களுக்கே பயந்து பூசைபோடுவது உண்டல்லவா?

நம்மவர் தெய்வங்களை அன்பால் வழிபடுவதுபோல், அச்சத்தாலும் வழிபடுகிறார்கள். அப்படியே அதிகார தேவதைகளையும் அக்காலத்தில் வழிபட்டு வந்தார்கள். பிரேம பக்தியோ, பய பக்தியோ, - எப்படியாவது தரிசனம் கிடைத்துவிட்டால் போதும்.

அந்த அதிகாரிகளின் வேலைக்காரர்கள் தடிகொண்டு அடித்து ஓட்டினாலும், ஜனங்கள் அதுவும் தங்கள் பாக்கியம் என்று அவர்களைத் தரிசனம் செய்யாமல் விடுவதில்லை.

ஆனால் அதே உத்தியோகஸ்தர்கள் உத்தியோகத்தைவிட்டு ஓய்வு பெற்றபின் - பொழுது போகவேணுமே! - நல்ல வார்த்தை சொல்லி வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தபோதிலும், அதே ஜனங்கள் அந்த மாஜி உத்தியோகஸ்தர்களைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டார்கள். "கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சி" தானே?

இத்தகைய நிலைமையை, உபகாரச் சம்பளம் பெற்றுத் தமிழ்த் தொண்டிலும் தெய்வத் தொண்டிலும் ஈடுபட்டிருந்த ஒரு உத்தியோகக் கவி பின் வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்:

தண்டு கொண்(டு) ஓட்டினும்
  போகாமல், நம்மைத் தரிசிக்கவே
பண்டு வந்தோர்(கு), இன்று
  தாம்பூலம் வைத்துப்பரிந்(து) அழைத்தும்,
திண்டுமிண்டும் சொல்லி வாரா
  திருந்தனர், செய்கை யெல்லாம்,
கண்டு கொண்டோம்; இனித்
  தொண்டு கொண்டோம் நம்கடவுளுக்கே!

[பண்டு - முன்பு.]

இந்த உத்தியோகக் கவி ஒரு நல்ல மனிதர்; எனவே நல்ல உத்தியோகஸ்தராகவும் இருந்தார். தமிழ் ஆங்கிலம் என்ற இரண்டு பாஷைகளிலும் பயிற்சி உண்டு: எனினும் இவரது தமிழ்க் காதல், அந்த நாளிலே சாதாரணமாக உத்தியோகஸ்தர்களுக்கும் ஆங்கிலம் கற்றவர்களுககும் ஏற்பட்டிருந்த ஆங்கில மோகத்தையும் வென்றுவிட்டது. தமிழில் தேர்ச்சிபெற்றிருந்ததோடு இந்த உத்தியோகஸ்தர்-ஆங்கில பாஷா சரஸ்வதிக்குத்தான் என்ன அபசாரம்! - தமிழ் நாவல் எழுதுவதிலும் ஈடுபட்டார். தமிழ்ச் செய்யுள் செய்வதிலும் முனைந்துநின்று ஓரளவு தேர்ச்சி பெற்றிருந்தார்.

இனி இவர் பெயரையும் வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறேன். 'மாயவரம் வேதநாயகம் பிள்ளை' என்றால், பிரதாப முதலியார் சரித்திரம் என்ற அந்த நாவல் உடனே ஞாபகத்

திற்கு வரும். தமிழில் முதல் முதல் நாவல் என்ற கவினக் கதை எழுதின பெருமை இவருக்குத்தான். "நாவலுக்கு உரிய லட்சணங்கள் இருக்கின்றனவா?" என்று ஆராய்ந்து பார்க்க மனம் இல்லாமலே அந்தக் கதையைத் திரும்பத் திரும்பப் படிக்கத் தோன்றும்: அவ்வளவு நல்ல-பண்டித படோடோபம் இல்லாத - தமிழ்.

நீதி நூல், சர்வ சமய சமரசக் கீர்த்தனை, பெண் மதிமாலை, சுகுணசுந்தரி முதலிய நூல்களும் இவர் இயற்றியிருக்கிறார். கிறிஸ்தவ சமயத்தினராயினும் சமரச உணர்ச்சி யுள்ளவர். டாக்டர் உ. வே. சாமிநாதையரைத் தமிழ் நாட்டுக்கு அளித்த மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்றவர்.

மாயூரம் என்ற மாயவரத்திலும் சீகாழி முதலிய இடங்களிலும் ஜில்லா முன்சீபாக இருந்தார். அக்காலத்திலே உத்தியோகஸ்தர்களுக்கு இருந்த அபாரமான செல்வாக்கை யெல்லாம் தமிழ் வளர்ப்பிற்கே உரிமையாக்கினார். இவருடைய துவாரபாலர்கள், தரிசிக்கவந்தவர்களைத் தண்டுகொண்டு - அதாவது, 'லத்தி சார்ஜ்' செய்து ஓட்டியிருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

தமிழ் அறிஞர்களுக்கும் ரஸிகர்களுக்கும் இந்த உத்தியோகஸ்தர் வீட்டிலே, 'அடையா நெடுங் கதவும், அஞ்சல் என்ற சொல்லும்' தான்!-என்றே கேள்வி. எனவே, இவர் தயவை விரும்பியவர்கள் தமிழ் ரஸிகர்களாகப் பாவனை காட்டியதில்தான் என்ன அதிசயம்!

இவரே மாஜி உத்தியோகஸ்தர் ஆனதும் மதிப்பு இழந்துவிட்டார் என்றால், இவரைத் தேடி வந்தவர்கள் எல்லாரும் உண்மையான ரஸிகர்களாகவும் அறிஞர்களாகவும் இருக்க முடியுமா?

நண்பர்களே! இந்த உத்தியோகக் கவிக்கும் ஒரு ஸ்தானமுண்டு, தமிழின் மறுமலர்ச்சித் திருவிழாவிலே. இவரது சமரசக் கீர்த்தனைகள் இக்காலிலும் சர்வ சமய சமரசத் துறையில் நமக்கு ஒரு வழி காட்டியாகவே விளங்குகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, இவரது பிரதாப முதலியார் சரித்திரம் தமிழ் நடைக்கு இன்றும் ஒரு வழி காட்டிதான். புதுமை எழுத்தாளர்களுக்கும்கூட.

---


## நமது புஸ்தகசாலை

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஜடாதரன் ... | 1 | 12 |
| 2. | தேசபக்தன் கந்தன் ... | 2 | 0 |
| 3. | முருகன் ஓர் உழுவன் ... | 1 | 8 |
| 4. | பச்சைக்கிளி ... | 2 | 0 |
| 5. | கதைக்கோவை III வால்யூம் | 7 | 8 |
| 6. | சந்தனக் காவடி ... | 1 | 6 |
| 7. | ஆரியமத உபாக்யானம் முதல் பாகம் ... | 0 | 10 |
| 8. | ஷை இரண்டாம் பாகம் ... | 0 | 12 |
| 9. | கைக்குத்து அரிசியும் மில் அரிசியும் ... | 0 | 10 |
| 10. | உணவும் சுகவாழ்வும் ... | 1 | 4 |

**சுவேதாரண்ய ஆசிரம புஸ்தகசாலை,**
34, அலமேலுமங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை

---

## BOOKS FOR ALL

*By K. S. Venkataramani*

| | | | |
|---|---|---|---|
| 1. | Paper Boats (5th Edition) ... | 1 | 4 |
| 2. | Kandan, the Patriot | 2 | 0 |
| 3. | On the Sand-Dunes ... | 1 | 0 |
| 4. | The Indian Village-A Ten Year Plan (2nd Edition) ... | 0 | 12 |

*By Manjeri S. Iswaran*

| | | | |
|---|---|---|---|
| 5. | Naked Shingles ... | 2 | 0 |
| 6. | Angry Dust ... | 2 | 0 |

*By C. M. Srinivasan*

| | | | |
|---|---|---|---|
| 7. | Organisation and Organisations ... | 1 | 8 |

**Svetaranya Ashrama,**
34, Alamelu Mangapuram,
Mylapore, Mardas.

# போகிற போக்கில்



மனம்போல் எழுதவேணும் என்ற சுதந்திரத்தை விரும்பியே உல்லாசக் கட்டுரைகளுக்குப் 'போகிற போக்கில்' என்ற அவசரத் தலைப்பெயரை நான் குறிப்பிட்டேன். "அவசரக் கோலம் அள்ளித் தெளி" என்கிற பழைய மொழிப்படி எந்த விஷயத்தைப் பற்றியும் மனம்போல், ஆராய்ச்சி செய்யாமல் இலக்கண இலக்கிய விதிகளுக்கும், வரம்புகளுக்கும், வல்லின இடையினக் 'கொடையடி'க்கும்பள்ளம்படுகுழிகளுக்கும் கட்டுப்படாமல் ஓடியாடும் பேனாவால் செங்கோல் செலுத்தி ஆட்சி புரிய வேணும் என்ற பூர்ண ஸ்வராஜ்ய அவாதான் என் போகிற போக்கிலே தூண்டுகிறது.

எதைப்பற்றி எழுதினாலும் 'போகிற போக்கில்' பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போல அமைப்பாய் எடுத்துக்கொள்ளுகிறது. ஆனால், பிரயாணத்தைப் பற்றியும், நமது தென் இந்திய ரயில்வே கம்பெனியைப் பற்றியும் (இது 9 மாதம் முந்தியே கம்பெனி வசமிருந்து இந்திய சர்க்கார் வசம் ஏப்ரல் மாதமே மாறிவிடுகிறது! அதற்காகக் கொஞ்சம் கூடுதல் பணம் - ஸ்டர்லிங் பாலன்ஸ்கள் மாந்தோப்பில் இலை சருகுகள்போல், லண்டனில் குவிந்து வருகிறதே அதை என்ன செய்கிறது!) எழுதுவது, போகிற போக்கில் மிக்க பொருத்தமாயிருக்கிறது.

ஆகையால் நான் இந்த மாதமும் பிரயாணத்தைப் பற்றித்தான் எழுதப் போகிறேன். அதிக தூரமில்லை - 50 மைல்தான், சென்னையிலிருந்து காஞ்சிமா நகரம். உண்மையில் இந்தப் புராதன நகரம் ஸ்வர்க்கலோகத்திற்குச் சமமாகவே நிற்கிறது. எவ்வளவு கோவில்கள், எவ்வளவு குளங்கள், ராஜ வீதிகள், என்ன அமைப்பு!

காஞ்சிபுரத்தில் பிப்ரவரி 7-ம் தேதி காமாக்ஷியம்மன் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறும். ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளே தான் நேரிலிருந்து விதிப்படி கும்பாபிஷேகத்தை நடத்துகிறார் - இது ஒரு பரபரப்பை எங்கும் பரப்பியது. இப்பெரியாரின் 25 வருஷத்திய மனோரதம் அன்றைய தினம் பூர்த்தியாகிறது. அது புண்ணிய தினம் அல்லவா? காமாக்ஷி அம்மனுக்குக் கும்பாபிஷேகம் செய்து 105 வருஷம் ஆகிறது. இந்தப் பேச்சு எங்கும் நிரம்பியிருந்தது.

* * *

தை வெள்ளிக்கிழமை, சாயந்திரம் 5-40க்கு பீச் ஸ்டேஷனில் 'எலக்டிரிக்' ரயில் வண்டியில் ஏறினோம். செங்கல்பட்டுக்கும் காஞ்சிபுரத்திற்கும் ரயில் மூலம் 55 மைல், - ரயில் மூக்கைச் சுத்திப்போகிறது. இந்த 55 மைல் போக மூன்று மணி பிரயாணம். மின்சாரத்திற்கே நமது நாட்டில் தபன் குறைவு.

சுமார் 15 வருஷங்கள் முந்தி ஆங்கில நண்பர் ஒருவரான பால் ப்ரண்டனும் நானும் சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்குப் பகல் வண்டியில் சென்றோம். 35 மைலுக்கு மூன்று மணி நேரம் பிடித்தது. என் நண்பருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இப்படி இங்கிலாந்தில் நகர்ந்துத் தள்ளாடி ரயில் போனால் பிரிட்டிஷ் மந்திரி சபை நிர்த்தூளியாய் விடுமே; நீங்கள் பசுக்கள் போலிருக்கிறீர்களே!—என்றார். ஆமாம். தீனியில்லாத, ஜார்ஜ் டவுன் பசுப்போல் என்று ஒட்டினேன். இப்பொழுது நாம் பசுக்கள்கூட அல்ல. வாலில்லாத தீனியில்லாத உழவு மாட்டைப்போலிருக்கிறோம். கலப்பையில் கட்டி, வாலை ஓயாமல் முறுக்கி, கூழை வாலாய்ப் போய் விட்டது!

* * *

நகரத்தில் சிரேஷ்டமானது என்று புராதனப் பெயர்கொண்ட காஞ்சிபுரத்தின் அழகையும் அமைப்பையும் ஸாந்நித்யத்தையும், நேரில் கண்டு அந்த மனப்பான்மையோடு அனுபவித்தவர்களுக்குத்தான் அதன் விசேஷம் தெரியும்.

சுபானு தைமீ 25, திங்கள் கிழமை காலையில் நடைபெற்ற காமாக்ஷியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தின் காட்சி ஒரு நாளும் என் மனதைவிட்டு விலகி நிற்காது. உள்ளம் பெருகும், கண் கொள்ளாத காட்சி. ஆத்ம வசப்படுத்தும் சக்தி. தாமிரத்தைத் தங்கமாய் அடிக்கும் மந்திர சக்திகொண்ட ஓர் சம்ஸ்காரத்தின் விசேஷத்தை உணராதவில்லை. இதை நடத்தி வைத்த மஹான் ஜகத்குரு காமகோடி பீடாதிபதி, அவரின் பிரஸன்ன, சாந்தரூப தரிசனம் ஒன்றே போதும்: ஓடும் நதியின் களையும், பரபரப்பும், புன்சிரிப்பும், தலை கொண்டு. பிரகாசிக்கும் சூரிய வெளிச்சத்தின் கிளர்ச்சியைப்போல் எங்கும் பரவிநிற்கும் சக்தியைக் கொண்டிருந்தது. குவிந்து கொண்டுவரும் ஆயிரக் கணக்கான ஜன [illegible] உள்ள நல்

வொருவருக்கும் ஓர் அன்பு விழியும் ஆசை மொழியும், ஆசி வார்த்தையும் அவர் களிப்புடன் அளித்தார்.

என்ன தபஸ்; என்ன காயக்கிலேசம்; என்ன சாந்தம், சுறுசுறுப்பு; என்ன தெளிவான குசாக்ர புத்தி; எங்கும் பரவி நிற்கும் அன்பு. அளவில்லாத அன்னதானம் - பஞ்ச காலத்தில். எதையும் கவனிக்கும் ஊக்கம், பார்க்கும் பார்வை, வகிக்கும் திறமை. என்ன உண்மையான அத்வைதம். வேற்றுமையில் ஒற்றுமையை பார்க்கும் கண், த்வேஷத்தை விலக்கும் அன்பு. மகத்தான மகானுக்கு வேறு என்ன லட்சணம் கலியுகத்தில் வேண்டும்?

இப்படிப்பட்ட உயர்தர ஸந்நிதியிலே கூட புத்துயிர் கிடைக்கவில்லை என்றால் நமக்கு எப்பொழுதுதான் விடுதலை, முன்னேற்றம்!

* * *

இந்துக்களின் நாகரிகம் மந்திர சக்தியில் பிறந்த முதல் பிள்ளை. நாதப்ரும்மத்தையே அண்டி, அதிலேயே லயித்து வாழ்வை மேன்மைப்படுத்த வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது நமது மதம், நமது நாகரிகம். இதைப் பெரும்பாலும், ரேடியோவின் சப்தத்தின் கையிலகப்பட்டு நாம் மறந்துவிட்டோம்.

எப்படி மின்சார சக்தி இல்லற வசதிக்கு பல வழிகளில் பயன்படுகிறதோ, அப்படியே மந்திர சக்தியும் தெய்வீகக் கிரியைகளுக்கு, செம்மைப் படுத்த, நமது வாழ்வை மேம்படுத்த உபயோகப்படுகிறது. எப்படி மின்சாரத்தை ஏராளமாக உற்பத்திசெய்ய ஒரு பன் [illegible] மலைப்பிரதேசத்தில் பைக்காராவில் (Pykara) ஒரு டைனமோ (dynamo) பிரதிஷ்டை செய்ய வேண்டியிருக்கிறதோ, அப்படியே இந்த மந்திர சக்தியைப் பிரதிபலிக்க ஓர் மஹான் [illegible] [illegible]

நன்மைக்காக இம்மாதிரி கோவில் கும்பாபிஷேகமும் யந்திரப் பிரதிஷ்டையும் செய்து, ஜீர்ணமான சக்தியை, இயந்திரத்தை மறுபடியும் 'ஓவர்ஹால்' (over-haul) செய்வதுபோல், புதுப்பித்துத் தேசத்திற்கு க்ஷேமம் அளிக்க வேண்டியது.

தென் இந்தியாவுக்கே காஞ்சிகாமாக்ஷியம்மன் கோயில் பைக்காராவைவிடப் பதின்மடங்கு மேம்பட்ட புத்துயிர் அளிக்கும் தேவி சக்திவாய்ந்த பீடமாயிருக்கிறது. இந்தக் கும்பாபிஷேகம் மூலமாய் நமது நாட்டுக்கு ஸ்வாராஜ்யமும், சமாதான வெற்றியும், உலகத்திற்கே க்ஷேமமும் சன்மார்க்கமும் ஏற்படும் என்று பக்தியுடன் நம்பும் பேதைகளில் நான் ஒருவன். பூர்வ புண்ணிய பாக்கியத்தால் இந்தக் கும்பாபிஷேகத்தையும், அதை நடத்திய மகானையும் குடும்ப சகிதமாய்ப் பார்க்கும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டதே என்று நன்றி செலுத்துகிறேன்.

மணி


# The Vanguard Insurance Company Ltd.

9-9 A., Blacker's Road, Mount Road, Madras

## POINTERS OF PROGRESS

- Lowest Expense Ratio
- Highest Bonus Possibilities
- Cent per cent Security to Policy-holders
- Excellent terms to Field Workers
- Decent return to Share holders

**See whether we satisfy all these requirements.**
**If you are satisfied, Tell others. If not, Tell us.**

Total Investments in Government and other Approved Securities : Rs. 3¾ lakhs.

H. D. RAJAH,
*General Manager.*

# சாந்தி

[சூர்யதாஸன்]

*[சாந்தி. ஓம் சாந்தி. எங்கும் பரவும் சாந்தி. மனப்புண்ணை ஆற்றும் சாந்தி. கரை புரண்டோடும் காதலின் சாந்தி. பொன்னாசையைப் பூர்த்தி செய்த சாந்தி. காட்டுத் தீப்போல் கொழுந்துவிட்டெரியும் காமத்தீயைப் பிடிசாம்பலாக்கிய சாந்தி. மானமெனும் வேள்வித் தீயில் உடலைப் புடம்போட்டுப் புனிதமாக்கிய சாந்தி. ஆவியைக் கலந்து அத்வைதமாக்கிய சாந்தி. ஸதியாகிய பெண்மை மலர் மலரும் சாந்தி. ஓம் சாந்தி.]*

**ப**டுபாவி! நானா படுபாவி? இல்லை. இல்லவே இல்லை. ஒருநாளும் இல்லை. பழிபாவத்தை எல்லாம் நானே சுமந்தாலும் மற்றவர் செய்த குற்றம் மாறி விடுமா? இல்லை. அந்தக் குற்றம் அடியுடன் மறைந்துதான் விடுமா? படுகுழியில் தள்ளவிருந்தார்கள் அருணாவை கண்ணிழந்து. ஞானக்கண், ஊனக் கண் இரண்டும்தான். வேறு வழியில்லை. ஓடிவந்தாள் பேயைக்கண்டு மருண்டவள்போல் அருணா. அணைத்துப் பரிவுடன் ஆதரித்தேன். இதுதான் நான் செய்தது. அடேயப்பா, என்ன பேச்சு; என்ன தூற்றுதல்; எவ்வளவு பழி; எல்லாவற்றிற்கும் நான்தானா? சிச்சி, என்ன பிறப்பு; பாழாய்ப்போன பிறப்பு. இதை எடுத்திருக்கவே வேண்டாம். தள்ளாத வயதிற்கு, பழுத்த கிழத்திற்கு, அருணா ஒரே ஒருத்தி. அவளை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? கடுகத்தனைதான் அவள். அவள் மேல் எள்ளளவாவது ஆசை வேண்டாமா?

எவ்வளவோ மேன்மையாகப் பிறந்தேன். எத்தனை சீரும் சிறப்புமாக வளர்ந்தேன். ஊருக்கே உயர்வாக இருந்த நானா எல்லார் வாயிலும் விழ வேண்டும்? கண்டவர் மனம் கொண்டபடி ஏசுவதைப் பேசாது கேட்டுக் கொண்டிருக்கவா வேண்டும்? வயிறு எரிகிறது. பேதையைப் பதைக்க விட்டார்கள். துடித்து உயிர்விட்டாள் ஸதி போல் பலியாக. நான் பரிதவிக்கிறேன். அருணாவைப் பறிகொடுத்தும் என் உயிரோடு இருக்கிறேன். அதையும் கடவுள் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாதா? ஹூம். எல்லாம் ஈசன் செயல். இல்லை; இல்லை. எல்லாம் மனிதர் செயல். கொடிய, கல்நெஞ்சு படைத்த மானிடப் பதர்களின் செயல். இருக்கட்டும். இதற்குமேல் என்ன செய்ய முடியும். எல்லாம்தான் ஆகிவிட்டதே. ஆனால் பழியோரிடம் பாவமோரிடம்.

சுமார் 180 வருஷங்கள் - ஏன் சரியாக......ஆமாம். சுமார் 183 வருஷங்கள். மீனாக்ஷி அம்மாளுக்காகக் கோதண்டபாணி அய்யர் இந்த வீட்டை வாங்கியதும் நான் பிறந்தேன். 183 வருஷங்கள். இந்த வயதிற்குள் எவ்வளவு சுக துக்கங்களைக் கண்டிருப்பேன். வாழ்வு தாழ்வைப் பார்த்திருப்பேன். இன்ப துன்ப ஓசைகளைக் கேட்டிருப்பேன். உள்ளத்திலிருந்து பொங்கிப் பரவிய உணர்ச்சிகளை உணர்ந்திருப்பேன். ஆனால் அருணா மறைந்தபோது, உள்ளம் உடைந்து சுக்குநூறாகிச் சிதறியதைப்போல் இதுவரையில் ஒன்றையும் அனுபவிக்கவில்லை.

நல்ல முதிர்ந்த வயதில் மீனாக்ஷி அம்மாள் பரகதி அடைந்தாள். அவள் கணவர் கோதண்டபாணி அய்யர் 'ஜாம் ஜாம்' என்று கல்யாணம்போல் அவள் கடைசிக் கருமங்களை நடத்தி வைத்தார். ஏன், கோயில் மேளம், மரியாதைகள் கூட வந்திருந்தன. பத்து வருஷங்களுக்குப் பிறகு மீனாக்ஷியின் மகள் கௌரீ, தன் முறையை ஏற்று யமனுடன் சென்றாள். அவள் கணவர் சுப்பிரமணிய

பிள்ளையும், சிறு மகள் காமாக்ஷியும் பரிதவித்ததைக் கண்டு, கண்கலங்கினேனே தவிர உள்ளம் உடையவில்லை. காமாக்ஷி வளர்பிறைபோல் வளர்வதைக் கண்டேன். தன் நாட்டியத்தால் உலகை மகிழச் செய்வதைக் கேட்டுப் பெருமையும் கொண்டேன். 'காமு' என்று அவள் கணவர் ஸ்ரீநிவாச அய்யங்கார் அவளை அன்புடன் எவ்வளவு அழகாக அழைப்பார் தெரியுமா? இருந்தாலும் என்ன. என் அருணாவை......ஹூம் அதைப் பிறகு சொல்கிறேன்.

தேய்பிறைபோல், காமுவின், மறைவையும் கண்டேன். காமுவைச் சொல்வதில் என்ன இருக்கிறது. எல்லாம் அய்யங்காரின் குற்றம் என்றுதான் சொல்வேன். முதலிலேயே கண்டித்திருந்தால் குடி முழுகியிருக்குமா? ஏதோ விளையாட்டு என்று ஆரம்பித்தது விபரீதத்தில் முடிந்தது. எல்லாம் சேர்க்கை தோஷம் குடி மிதமிஞ்சியது. எல்லாம் மறந்தாள் காமு. வீடு ரகளைப்படும். ஒவ்வோர் இரவிலும் அய்யங்காருக்கும் காமுவுக்கும் ராம ராவண யுத்தம். தோல்வியைத் தாங்காது அய்யங்கார் உயிர் விடுத்தார். பிறகு ஏதேதோ நடந்தது. அதைச் சொல்லக்கூட நாக்குக் கூசும். மனம் நடுங்கும். உடல் குன்றிச் சுருங்கும்.

காமாக்ஷியின் மகள் சுந்தரி மிகவும் ஸாது. வெளுத்ததெல்லாம் அவளுக்குப் பால். தாயாரின் கொடுமைகளை வாய் திறக்காமல் பொறுத்துக் கொண்டாள். அதை எண்ணித்தான் தகுந்த கணவனைக் கடவுள் அவளுக்கு அளித்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் சுந்தரி எங்கே, வாஸுதேவ முதலியார் எங்கே! "நல்ல காலம் பிறந்துவிட்டது. தாயார் நாசம் செய்ததை சீர்படுத்தலாம்" என்று மனக்கோட்டை கட்டி மகிழ்ந்தாள் பேதை சுந்தரி. அவள் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்றை நினைத்து முடித்தது. திடீரென்று முதலியார் பரமன் திருவடியடைந்தார். சுந்தரிக்கு, அவர் பங்காளிகள் நாமம் போட்டார்கள். முதலியாரால் அவளுக்குக் கிடைத்து மிஞ்சிய செல்வம் அருணாதான்.

என்ன இது. எல்லாம் ஒரே கலப்பாக இருக்கிறதே. அய்யர், பிள்ளை, அய்யங்கார், முதலியார் எல்லாம் கலக்கிறதே என்று எண்ணித்தானே திகைக்கிறீர்கள்? திகைப்பிற்கு என்ன இருக்கிறது? ஏன், கலப்பில்தானே எல்லாம் இருக்கிறது? கலப்புத்தானே வாழ்க்கையின் ஜீவன்? அது இல்லை என்றால் வாழ்வில் உயிர் ஏது? மறைகள் முறையிடும் ஒருமை, அத்வைதம் என்பது அதுதானே? அழகு எதில் இருக்கிறது? இனிமை எதில் உண்டு? எல்லாம் கலப்பில். தனிமையில் அது ஏது? தன் உடலில் ஒரு பாதியை உமையாளுக்கு அரன் ஏன் அளித்தான்? வெட்ட வெளியில் தன் தனிமையை மறைக்கவும், மறக்கவும்தானே அந்தக் கலப்பு?

ஏது, வேதாந்தம் முற்றிப்போய், விபரீதப் பேத்தலாகி விட்டதென்று சிரிக்காதீர்கள். என் வயது உங்களுக்கும் ஆனால்தான் கலப்பின் உண்மையை உணரமுடியும். அப்பொழுதுதான் கலப்பின் உயர்வை அறிந்து, மெய்யென்று அதை வாழ்வின் உயிராகக் கொள்வீர்கள். நவநாகரிகம் முற்றிய இந்த நாளில் நீண்ட ஆயுள் உங்களுக்கு ஏது? சற்றும் தயங்காமல் என் சொல்லை ஏற்று, அதை நம்புங்கள். அதிருக்கட்டும். இதுவரை சொன்னதிலிருந்து ஒன்றையும் அறிந்து கொள்ளவில்லையா? எங்கே முகத்தைக் காட்டுங்கள். யூகம் ஸரியா என்று பார்ப்போம்.

ஸரிதான். என் அருணா, கடவுளுக்கு அடிமையானவர்களின் வகுப்பைச் சேர்ந்தவள்தான். உதாசீனமாய்த் தேவதாஸி என்பீர்களே அதே வகுப்புத்தான். ஆனால் என்ன. குணத்தால் குலமே தவிர, பிறப்பால் என்ன? கடவுள் வசப்பட்டது பிறப்பு. நம் கைப்பட்டது குணம். என்ன மிகவும் தடபுடலாக இருக்கிறது? இவ்வளவு திட்டமாய் எப்படிச் சொல்லமுடியும் என்றுதானே எண்ணுகிறீர்கள்? உங்களுக்கு

அருணாவைத் தெரியாது. தெரிந்திருந்தால் இதில் சந்தேகமே இருக்காது.

செட்டாய்க் குடித்தனம் செய்தாள் சுந்தரி. கொள்பாட்டி தேடிவைத்த வீடும், அவள்மேலுள்ள நகைகளும் தான் உலகம் போற்றும் செல்வமாக அவளுக்கு மிஞ்சியவை. ஆனால் சுந்தரி போற்றிய செல்வம் என் அருணாதான். ஐந்து வயதுச் சிறுமிதான். குறுகுறுவென்ற கருவிழிகள், விறுவிறுவென்று உயிருடன் பிரகாசித்துப் பேசும். அழுத்தம் திருத்தமாய், சமர்த்தாய்ப் பேசுவாள். வாயும் கண்ணும் பேச ஆரம்பித்தால் அதைக்காண கண்கள் இரண்டு போதாது. முகத்தைச் சுற்றிச் சுருள் சுருளாகக் கூந்தல் நெளியும். சந்திரனைச் சுற்றியுள்ள கோட்டை, சந்திரனுக்கு சோபையைத்தானே தருகிறது. மிகவும் சமர்த்து. துருதுருவென்று ஓயாமல் ஏதேனும் செய்துகொண்டிருப்பாள். நடந்தால் ஒரு நளினம். நின்றால் ஒரு ஒய்யாரம். குழந்தையை வாரி எடுத்து அணைக்க ஆசைப்படாதவர் கிடையாது.

"நாட்டியம் ஆடத்தகுந்த பாத்திரம்."

ஸம்ஸ்க்ருத பண்டிதர் கூறிய இம்மொழிகள் சுந்தரியைத் தூக்கிவாரிப் போட்டன. தாயார் காமுவின் கதி மறக்குமா? மனதைத் திடப்படுத்திக்கொண்டு, அருணாவிற்குச் சங்கீதம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்தாள். 'நாட்டியமாடினால்தானே, காமுவின் கதி தன் மகளுக்கும் கிடைக்கும். நாட்டியம் ஆடாது பாட்டுப் பாடினால் அது வராது' என்று அவள் நினைத்ததே இதன் காரணம்.

உள்ளூர் நாகஸ்வர வித்வான் ஒரு அபஸ்வரக் குடுக்கை. அவரை விட்டால் வேறு ஒருவரும் கிடையாது. ஆகவே நல்லநாள் பார்த்துப் பாடம் ஆரம்பமாகியது. வயது ஆறுதான் அருணாவிற்கு. நீலநிறச் சட்டையும், கருப்புப் பாவாடையும், அவளுடைய தந்தநிற மேனியால் பிரகாசித்தன. தலை நிறைய மல்லிகைப்பூ. முகத்தில் புன்னகை. அப்பொழுது அவளைப்பார்த்தது இன்னமும் அப்படியே என் மனதில் பதிந்திருக்கிறது. [illegible] ஸ்வராவளியத்தை இழுத்து வைத்துக்கொண்டு, நாகஸ்வர வித்வான், ஸா - பா - ஸா-வை அருணாவிற்குச் சொல்லிக்கொடுத்தார். அருணா பாடினாள். யாழ்போல் இசைந்தது அவள் குரல். சாதாரண ஷட்ஜம பஞ்சமங்கள், உயிருடன் அவள் நாவில் உல்லாஸமாய் நர்த்தனமாடின. அபஸ்வரக்குடுக்கையும் தன்னையிழந்து ச்ருதியுடன் சேர்ந்தாரென்றால், பிறகு கேட்கவேண்டுமா? ஆறு மாதத்திற்குள் 20 வர்ணங்கள், ச்ருதிலய சுத்தமாய் நாகஸ்வர வித்வானுக்குப் பாடமாகிவிட்டன. அருணாவின் இயற்கை அறிவுக் குரலும் இருக்க அவருக்கு ஏது குறை?

சங்கராபரணம் சங்கர அய்யர் ஒரு பழுத்த சங்கீதக் கிழம். எங்கேயோ இருந்தவரைத் தேடிப்பிடித்து இழுத்து வந்தார் நாகஸ்வர வித்வான். அருணா பாடினாள். கிழவர் உலகை மறந்தார். தன் சங்கீதத்தை எல்லாம் மழையாகப் பொழிந்தார். அள்ளிப் பருகினாள் அச் சங்கீதாம்ருதத்தை அருணா. அத்துடன் கலந்தாள். கலப்பால் ஜ்வலித்தாள். வயது ஒன்பதும் முடிவுற்றது.

" அம்மா, அருணா! மீதமில்லாமல் என் சங்கீத ஆஸ்தியெல்லாம் உன்னிடம் கொடுத்துவிட்டேன். அதைப் போற்றிச் சிரஞ்சீவியாக இரு."

அய்யருக்குச் செல்வத்தில் பற்றே கிடையாது. இல்லாவிட்டால் அவர் செய்த ஆசீர்வாதத்தில் செல்வத்தைப் பற்றிச்சொல் ஒன்றாவது இருக்காதா? அய்யர் உத்திரவு பெற்றுக்கொண்டார். நாகஸ்வர வித்வான் தலையால் நடக்கிறோமா அல்லது காலால் பேசுகிறோமா என்பதுகூடத் தெரியாது நடந்தார். அருணா பாட்டுச் சொல்லிக்கொள்வதைப் பார்ப்பதாகச் சாக்கிட்டுத் தெரிந்தவர்களும், மிக்கத் தெரிந்தவர்கள் போல் தெரியாதவர்களும், வீட்டிற்குள்ளும் வெளியிலும் இடித்திற்கலாயப்

போட்டி இடுவதைக்கண்டபின், அருணாவின் கச்சேரிகளில் கூட்டம் எவ்வளவு இருக்கும், அரங்கேற்றும் தினத்தில் தனக்கு எவ்வளவு ஸன்மானம் கிடைக்கும் என்பதை எண்ணி உள்ளமகிழும் அளவிற்கு நாகஸ்வர வித்வானுக்கு மூளை இல்லாமல் போகவில்லை. ஸ்ரீராமனுக்கு, ராமன் என்ற பெயரிட்ட பெருமை வஸிஷ்டருக்கு எவ்வளவு உண்டோ, அவ்வளவு பெருமை, சங்கீதக் கிழவரை அருணாவிற்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கவைத்ததில் நாகஸ்வர வித்வானுக்கு உண்டு என்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

* * *

ஒன்றும் அறியாச் சிறுமி. சங்கீதத்தில் தன் சிந்தையை இழந்தவள். வீட்டில் பேச்சுக்கு மட்டில்லை. தாயின் குதூகலத்திற்கு எல்லை இல்லை. பத்துவயதுச் சிறுமி உலகை அறிந்தாள். தன் வகுப்பின் மனப்பான்மையைத் தெரிந்தாள். தன் தாயின் நெஞ்சிலுள்ளதை உணர்ந்தாள். திகைத்தாள். தன் மனத்தைத் திறந்து சொல்லிக்கொள்ளத் தகுந்தவர் இன்றித் தவித்தாள். நான் கண்ணில் பட்டேன். அவள் உள்ளத்தில் என்ன தோன்றியதோ, என்னிடம் ஓடி வந்தாள். இல்லை, கடவுள்தான் அவளை அனுப்பி இருக்கவேண்டும். இல்லாவிட்டால், வீட்டின் பின்புறம் ஒரு மூலையில் கிடக்கும் நான் ஒரு பொருட்டா அவளுக்கு!

ஒரு காலத்தில் நான் தடபுடலாகத்தான் வாழ்ந்து வந்தேன். தவறாது காலையிலும் மாலையிலும் ஊரிலுள்ளவர்கள் எல்லோரும் நான் இருக்குமிடத்திற்கு வந்துவிடுவார்கள். பிறகு அவர்கள் செய்யும் கொட்டத்திற்கும் அட்டகாசத்திற்கும் அளவே கிடையாது. அவர்கள் பேசும் ஊர் வம்புகளை எல்லாம் வாய் திறவாமல் கேட்டுக்கொண்டிருப்பேன். மீனாக்ஷி அம்மாள் வீட்டில் பிறந்து வளர்ந்து மீனாக்ஷி அம்மாளுக்கு நான் சொந்தமாக இருந்தாலும் ஊருக்கெல்லாம் சொந்தமாகவே விளங்கி வந்தேன். ஊருக்குப் பொது, நடுநிலைமை என்றால் பிறகு சண்டைக்குக் கேட்கவேண்டுமா? 'நான் முந்தி, நீ முந்தி, எனக்குச் சொந்தம் உனக்குச் சொந்தம்' என்றெல்லாம் பேசி என்னை ஆட்டிவைத்துவிடுவார்கள். ஒருபொழுது கழிவதற்குள் பிணம்போல் ஆகிவிடுவேன். ஒருதரம் திடீரென்று சண்டை ஆரம்பித்துவிட்டால் அதற்குப் பிறகு முடிவே கிடையாது. ஆகவே என் உதவி இல்லாது ஒருவரும் வாழமுடியாது என்று கர்வம்கொண்டேன். அது ஒரு காலம். அது கடவுளுக்குத் தாங்கவில்லை. என் செருக்கைக் குலைத்தார். நான் வாழ்ந்த காலம் போச்சு. நவநாகரிகம் உதயமாச்சு. அதன் ஒளியில் மங்கினேன். மறைந்தேன். நாடுவார் தேடுவார் இன்றித் தட்டுக்கெட்டேன். ஒருவர் தயவுமின்றிச் சுலபத்தில் காரியம் முடிந்தால், பழங்காலக் கிழத்துடன் இண்டாட எவருக்குத்தான் மனம் வரும். கடைசியில் மாடுகன்றுகூட என்னை அண்ட மறுத்தன. இந்த நிலையில் இருந்தேன். இதையறிந்தும் நான் இருக்கும் இடத்தைத் தேடி அருணா வந்தால் ஏன் ஆச்சரியப் படமாட்டேன்?

என்மேல் சாய்ந்தாள். என்னையே பார்த்தாள். நானும் அவளைப் பார்த்தேன். ஆழ்ந்த யோஜனை அவள் முகத்தில் குடிகொண்டது. நானும் யோஜிக்க ஆரம்பித்தேன். அருணா யோஜிக்க ஆரம்பித்தால் நான் என்ன செய்வேன்.

மாலை நேரம். ஜில்லென்று காற்று வீசிக்கொண்டிருந்தது. வானம் சிவந்தது. அருணாவைக் கண்டு வெட்கமடைந்தா, இல்லை கோபத்தாலா?

தோட்டக்காரன் வந்தான். அவன் குழந்தை, 'அப்பா' என்று கூவிக்கொண்டே தவழ்ந்து அவனிடம் வந்தது. சத்தம் கேட்டுத் திடுக்கிட்டாள் அருணா. அவர்களைக் கவனித்தாள். ஓடிச் சென்று குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டான் தகப்பன். மடியிலிருந்து ஒரு வாழைப் பழத்தை எடுத்து அதன் கையில் கொடுத்தான். 'அப்பா' என்று சந்தோஷக் கூச்சலுடன் அவனைக் கட்டிக்கொண்டது

குழந்தை. இருவரும் குடிசைக்குள் சென்றார்கள். நிசப்தம் எங்கும் பரவியது.

" அப்பா !"

திடுக்கிட்டேன். யார் மறுபடியும் கூப்பிட்டார்கள் என்று சுற்றிலும் பார்த்தேன். நானும் அருணாவும்தான் இருந்தோம்.

" அப்பா. என்ன சந்தோஷம். சிறு குழந்தை - உலர்ந்த பழம் - எவ்வளவு அன்பு "

என்னவிது. யாருடன் அருணா பேசுகிறாள். ஒருவரையும் காணோமே.

" ஆமாம். அப்பா இருந்தால் - எனக்கும் ஒரு அப்பா இருந்தால் - தாயடித்தால் தகப்பன் அணைப்பான் "

தகப்பனைக் கண்டறியாத அருணாவிற்குத் தந்தையைப்பற்றி என்ன தெரியும். ஏதோ எல்லாம் தெரிந்தவள் மாதிரி பேசுகிறாளே. தாய் என்ன செய்துவிட்டாள். தகப்பன்தான் என்ன செய்துவிட முடியும் ?

" தகப்பனிருந்தால், என் குறைகளை எல்லாம் சொல்லிக் கொள்ளலாம். பொறுமையுடன் கேட்பார். மறைக்காமல் மனதிலுள்ளதைச் சொல்லலாம். கேலி செய்யமாட்டார்."

சுந்தரிக்கு அருணாவின்மேல் அன்பு உண்டு. ஆனாலும், பெண்ணைவிடப் பொன்னிடம்தான் தாஸிகளுக்கு அன்பு அதிகம். அதனால்தான் அப்பாவை அருணா தேடுகிறாளா ?

"எனக்கு அப்பா இல்லை. அப்பாவாக யாராவது இருந்தால்...... ஹூம்... அப்பா, அப்பா."

யாரைக் கூப்பிடுகிறாள். அதுவும் தழ தழத்த குரலில் பயத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை. பயந்தெளிந்தேன்.

" பேசமாட்டாயா ?"

திடுக்கிட்டேன். யாராவது பதில் சொல்கிறார்களா என்று கவனித்துக் கேட்டேன். பதில் ஒன்றுமே இல்லை.

" அப்பா, அழுகை வருகிறது."

மறுபடியும் திடுக்கிட்டேன். இப்பொழுது சந்தேகமில்லை, என்னைத்தான் கூப்பிட்டாள் அவள். ஆனால் நான் மறுபடியும் திடுக்கிட்டதில் தவறொன்றுமில்லை. ஏன் நான் ஆணா பெண்ணா என்பது எனக்கே தெரியாது. இதுவரை ஒருவரும் அதை எனக்கு எடுத்துச் சொல்லவில்லை. ஆனால் ஊர் மக்கள் படுத்தின பாட்டையும், செய்த அக்கிரமத்தையும் சகித்துக்கொண்டு, பொறுமையுடன் நான் அவர்களுக்கு உதவி செய்ததால், நான் ஒரு பெண்தான். பெண்மை அல்லாத ஒருவருக்கு இவ்வளவு பொறுமை ஏது ? பொறுமையில் பூமாதேவி என்பார்களே. அவள் ஒரு பெண்தானே. ஆகையால் நானும் ஒரு பெண்தான். ஆனால் அருணா ஏன் அப்பா என்று அழைத்தாள் ? நான் பெண்ணில்லையா ஆண்தானா, இப்பொழுது உருக்குலைந்து விட்டேனா ?

அருணாவின் குரலில் துயரம் ததும்பியது. நான் ஆணாக இருந்தாலுஞ் சரி, பெண்ணாக இருந்தாலுஞ் சரி, சிறுமி அருணா, தவறாக என்னை ஆண் என்று எண்ணினாலுஞ் சரி, அவள் அழுது புலம்ப நான் இடங்கொடுக்கமாட்டேன். இல்லை, யார்தான் இடம்கொடுப்பார்கள். அவள் கண்ணீர்த் துளிகள் என்மேல் விழுந்தபிறகு நான் தயங்குவேனா? நான் அப்பாதான். அருணாவின் அப்பா. அவள் என் மகள். அருமை மகள். அந்தப் பெருமை எனக்குத்தான். அது வேறு ஒருவருக்கும் கிடையாது. நான் அப்பாவாக இருந்தாலும் சரி, அம்மாவாக இருந்தாலும் சரி, அருணா என் மகள். அந்த உறவுக்கு ஒரு மாறுதலும் கிடையாது. ஆமாம். முதலியாருக்கும் என் மேல் பிரியம் அதிகம். நான் மடிந்துவிடுவேன் என்று எல்லோரும் எண்ணிய பொழுது, எவ்வளவு செலவழித்து என்னை உருவாக்கி உயிருடனிருக்கச் செய்தார். என் பிரிய நண்பர் அவர். அவர் மகளுக்கு அப்பாவாக இருக்க எனக்கு உரிமையுண்டு.

அருணா அழுததின் காரணம் வேறொன்றுமில்லை. அன்று சோதிடர் வந்து அவள் ஜாதகத்தைப் பார்த்துப் பலன் சொன்னார்.

"கிரஹங்களின் நிலை சரியாக இல்லை. மணம் செய்தால் மாங்கல்யம் இழப்பாள்."

அபிநவவராஹமிஹிரர் காட்டிய முடிவு இதுதான். எல்லாம் தன்கையில் இருப்பதுபோல் அறுத்துக் கட்டிப் பேசினார் சோதிடர். அருணாவை மணம் செய்துகொள்ள அநேகர் முன்வந்தார்கள். வகுப்பாரில் போட்டியுமிருந்தது. முறைக்காரர்கள் முனைந்து நின்றார்கள். தேனைத் தேடி ஈ வராதா? மலரைக் கண்டு மதுவையடைய தேனீ வருவது இயற்கைதானே? மானத்துடன் வாழட்டும் தன் மகள் என்று சுந்தரியும் எண்ணியிருந்தாள். ஆனால் சோதிடர் தஞ்சாவூர் நந்திபோல் குறுக்கே நின்று, ஆந்தைபோல் அலறி அபசகுனமாக அமங்கள வார்த்தை சொல்லிவிட்டாரே. அதன் பிறகு சுந்தரி என்ன செய்வாள்? பொட்டுக் கட்டிச் சம்பிரதாயப்படித் தன் வாழ்க்கையை அருணா நடத்துவதே சரி என்று முடிவு கட்டினாள் சுந்தரி. இதைக் கேட்டு வருந்தாமல் அருணா எப்படி இருப்பாள். தன் வகுப்பினரின் போக்கையும், வாழ்க்கையையும், உறமுறையார் பேசக் கேட்டிருக்கிறாளே. அதே வாழ்வு தனக்கும் என்றால் அருணாவின் மனம் ஏன் துடிக்காது?

* * *

நல்ல நாள் பார்த்துக் கோயிலில் அருணாவிற்குப் பொட்டுக் கட்டினர். பத்தாவது வயதில்! கோவிலிலிருந்து திரும்பிய அருணா சிரித்த முகத்துடன் என்னிடம் வந்தாள். வருத்தத்தைச் சிறிதும் காணவில்லை. அவள் மனம் மாறிவிட்டதோ என்றுகூடச் சந்தேகித்தேன்.

"சோதிடர் வாக்குப் பலித்துவிட்டது. அவர் சாஸ்திரம் பொய்யாகுமா?"

ஒன்றும் விளங்காது அருணாவின் முகத்தைப் பார்த்தேன். ஆகாயத்தை நோக்கியிருந்த கண்கள் என்னை நோக்கின. கண் கலங்கியது. முகம் மங்கியது.

"அப்பா! எவ்வளவு பயம், என்ன கவலை, எப்படிச் செய்தேன்? கோயிலில் சடங்குகள் எல்லாம் தடபுடல். ஏகக்கூட்டம். கடவுளின்பிரதிநிதியாக அர்ச்சகர் தாலியுங்கையுமாக வந்தார். அவரிடம் என் கழுத்தைக் கொடுக்க மறுத்தேன். எல்லோரும் என்னென்னவோ சொல்லிப் பார்த்தார்கள். கல்லுப் பிள்ளையாராவது அசைந்திருக்கும். நான் இடித்த புளிமாதிரி இருந்தேன். கடைசியில் சித்தி அதை வாங்கி என் கழுத்தில் கட்டினாள். மறுநிமிஷம் அதை அறுத்துக் கடவுளின் திருவடியில் சேர்த்தேன். அப்பொழுது பார்த்திருக்க வேண்டும் கூட்டத்தின் முகத்தை. ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. இப்படிச் சோதிடர் வாக்குப் பலித்தது. நானும் மாங்கல்யம் இழந்தேன்"

கண் மின்னியது. முகம் மலர்ந்தது. அருணா ஆகாயத்தை நோக்கினாள்.

மூடன். வெறும் ஜடம் என்றால் நான்தான். அருணாவைச் சந்தேகிக்கத் துணிந்த பிறகு நான் பகுத்தறிவுள்ளவனாவேனா? அருணா செய்ததைச் சுந்தரி சிறு பிள்ளையின் முட்டாள்தனம் என்று எண்ணினாள். அருணாவின் மனதை, நான் அறிந்ததுபோல், அவளும் அறிந்திருந்தாள்....நல்லவேளை. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது பொய்யா?

அருணாவிற்குக் கச்சேரிகளுக்குக் குறைவேயில்லை. நிறையச் சம்பாதித்தாள். கட்டுப்பட்டிருந்த சுந்தரியின் கை கட்டுக்கடங்காது விரிந்தது. சிக்கனத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்த சுந்தரி கண் தெரியாது செலவழித்தாள். அடக்கி வைத்திருந்த ஆவலுக்குச் சிறிது இடம் கிடைத்தால் கண்மூடித்தனமாய் நடப்பது இயற்கைதானே. சம்பாதிக்க அருணா இருக்கிறாள்.

மேலும் அவளுக்குப் பொட்டும் கட்டியாகிவிட்டது. பிறகு சுந்தரிக்குக் கவலை ஏன்? சம்பாதிக்கும் பொறுப்பை அருணாவின் குரல் ஏற்றுக்கொண்டது. செலவழிக்கும் தொழிலைச் சுந்தரி செம்மையாகச் செய்துவந்தாள். பழைய கடன் சுமை அப்படியே மார்க்கண்டனைப் போல் இருந்தது.

* * *

தகுந்த வயது வந்ததும் இயற்கையால் ஏற்படும் 'ருது' ஆகுதல் என்பது பெண் இனத்திற்குச் சாதாரணமானது. ஆயினும், தேவதாஸிகள் அதை மிகவும் பெரிதாகக் கொண்டாடுவார்கள். மணம் என்ற சடங்கு இல்லாததால் திருமணத்தைவிடப் பெருமணமாக அதை அவர்கள் செய்வார்கள். 'எங்கள் வீட்டில் பருவமடைந்த பெண்ணொருத்தி இருக்கிறாள். காமாந்தகாரத்தில் மூழ்கி வழிதெரியாது தவிக்கும் மானிடருக்குக் கண் திறந்து, வழிகாட்டிக் கரை சேர்ப்பாள் அவள்' என்று தங்கள் தொழிலுக்கும் ஒரு பெரும் விளம்பரமாகச் செய்துவிடுவார்கள் தேவதாஸிகள். அந்தத் தேவதாஸிகளை மானிட தாஸிகளாக மாற்ற 'நான் நீ', என்று மனிதப் பிசாசுகள் போட்டியிடும். இந்தச் சடங்கும் அருணாவிற்குப் பதிமூன்றாம் வயதில் நடந்தேறியது.

மனிதப் பிசாசுகளின் நடமாட்டம் சுந்தரியின் வீட்டில் உண்டாகியது. பருவமான பெண்ணிருக்க அவள் மானத்தையும் ஆவியையும் குடித்துத் தங்கள் விடாயைத் தீர்த்துக் கொள்ளாவிட்டால் பேய்களாயிருப்பதன் பயன் என்ன? அதுவும் மானிடப் பேய்களாய்.

"ரூபாய் ஐயாயிரத்திற்குக் குறைந்தால் அந்தப் பேச்சே எடுக்கவேண்டாம்"

சுந்தரியின் மதிப்பில் அருணாவின் மானம் இவ்வளவுதான் பெற்றது. அருணாவின் உடலுக்கு இவ்வளவுதான் விலை. பேய்களில் ஒன்றிரண்டு அதற்கும் அஞ்சவில்லை. ஆனால் அருணாவின் அதிர்ஷ்டமோ அல்லது வாஸுதேவ முதலியாரின் மனைவியாகி, அவருடன் சேர்ந்ததால் நேர்ந்ததோ என்னவோ, சுந்தரிக்குச் சிறிது நல்ல குணம் தோன்றியது.

"அருணாவின் பதினாறாவது வயது முடியும்வரை இந்தப் பேச்சு என்னிடம் வேண்டாம்"

கண்டிப்பான பேச்சால் பேய்களை ஏங்கவிடுத்தாள் சுந்தரி. பயமும் தெளிந்து பெருமூச்சுவிட்டாள் அருணா. என்னிடம் ஓடிவந்தாள்.

"அப்பா, தொலைந்தது சனி. இன்னம் மூன்று வருஷங்களுக்கு என்னை ஒரு பூதமும் அண்டாது. அந்தக் கவலை இல்லை."

சந்தோஷத்தில், செடிகளிலுள்ள மலர்களைப் பறித்து என்மேல் எறிந்தாள். பேய்களை விரட்டியடித்தது நான்தான் என்று எனக்கு மலர்மாலை அணிந்தாள் என்றிருந்தது அவள் என்னருகில் உட்கார்ந்து அளித்த காக்ஷி.

* * *

அருணாவிற்கு வயது பதினைந்து. கணக்கு வழக்கில்லை கச்சேரிகளுக்கு. ஆனால் கடன் சிறிதும் குறையாது, அன்று கண்டதுபோல் இன்றும் இருந்தது. ஒரு நாள் குதூஹலத்துடன் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாட வந்தாள் - நர்த்தனமாட என்று சொல்ல முடியவில்லை. நர்த்தனம் என்றால் ஏதாவது ஒரு கட்டிற்கடங்கும். தாண்டவத்தில் அது ஏது. வெறி மீறியல்லவோ புரிந்தான் பரமன் தாண்டவம் - கச்சேரிக்குப் போய் அப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறாள். பொறுக்க முடியாது அவ்வளவு அவஸரமான விஷயம் என்ன? யோசிக்கலானேன்.

"அவரைப் பார்த்தேன்...என் அதிர்ஷ்டம், என் அதிர்ஷ்டம்."

திடுக்கிட்டு விழித்தேன். விஷயம் ஒன்றும் புரியாது திருதிருவென்று பார்த்தேன். அருணா யோசனையிலிருந்தாள்.

"என் மனம்....அப்பா, கட்டுக்கடங்காது குதிக்கிறதே."

எங்கும் அமைதி. விஷயம் தெரிந்தால் அல்லவோ பேச்சிற்கு இடம். அமைதியால் திடுக்கிட்டாள். என்னைப் பார்த்தாள். முகத்தைப் பார்த்தும் நாணத்தால் தலை குனிந்தாள்.

"இன்னுமா தெரியவில்லை? போ, போ என்னிடங்கூடவா இந்த விளையாட்டு. யார் சொல்லு பார்ப்போம்."

தெரிந்தால்தானே சொல்லமுடியும்? பேசாது அருணாவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"நிஜமாகவா தெரியவில்லை? ஹூம் ஹூம் இப்படித்தானா என்னோடுவிளையாட்டு. இனிமேல் உன்னோடு...."

பொய்க்கோபத்துடன் அருணாவைப் பார்த்தேன். எவ்வளவு நேரம்தான் விஷயத்தைச் சொல்லாமல் இப்படி வேடிக்கை செய்யலாம்.

"இல்லை, இல்லை சொல்லிவிடுகிறேன். கோபம் வேண்டாம். ஹூம் வெட்கமாக இருக்கிறது...ஹூம் அவரைத் தான், உன் மாப்பிள்ளையைப் பார்த்தேன் அப்பா. இப்பொழுது தெரிந்ததா?"

அட கடவுளே. இதற்குத்தானா இவ்வளவு கூத்தெல்லாம் அடித்தாள்? நான் என்னெல்லாமோ நினைத்துவிட்டேன். திருச்சியில் கச்சேரி. முதல் வரிசையில் ஒரு வாலிபன். கச்சேரி முடிந்தது. வாலிபன் எழுந்து செல்ல ஆரம்பித்தான். பிடில் வித்வான் கும்பிட்டார். வாலிபன் நின்றான்.

"என்ன ஸார், உங்களுக்கு அருணா தெரியாதா? அருணா! இவர்தான் ஸ்ரீமான் சிவகுமார்; நல்ல ரஸிகர்; சங்கீதத்தில் மிகுந்த நிபுணர்......"

அளந்துகொண்டே போனார் பிடில் வித்வான். அருணா ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் தன் காரியத்தை கவனிப்பது வழக்கம். அது போல் கும்பிடு போடத் திரும்பினாள். மேடையை நோக்கிய சிவகுமாரின் கண்களை அருணாவின் கண்கள் சந்தித்தன.

"அப்பா, என்ன மயிர்க்கூச்சல். மின்சாரம் தாக்குவதுபோல் முகம் சிவந்தது. பிடில் வித்வான் கூறியது ஒன்றும் காதில் விழவில்லை. பார்த்த கண்கள் பார்த்தபடியே அப்படியே பதுமையானேன். ஆனால் உயிருள்ள பதுமை. உள்ளம் பறிகொடுத்த பதுமை."

அட பைத்தியமே. உள்ளமாவது பறிகொடுப்பதாவது, அருணா இன்னமும் சிறு பெண்தானே. ஏன் பிதற்றமாட்டாள். சுந்தரியையும் அறிமுகப் படுத்தினார் வாலிபனுக்குப் பிடில் வித்வான். அவளும் அவனுடன் பேசினாள்.

"அப்பா, எப்படியோ என் கண்ணை என் வசம் திருப்பிக்கொண்டு வந்தேனே. அம்மா வந்து பேசாவிட்டால், அவர்கண் என் முகத்தைவிட்டு அகன்றிருக்குமா? நல்ல வேளை அவராகக் கண்களைத் திருப்பாவிட்டால் என்கதி என்ன ஆகியிருக்கும்? திரும்பிப்போக மனம் இடம் கொடுத்ததா? இன்னம் பார்த்துக்கொண்டே யிரு என்று மனம் அழுத்தினால் கால் எப்படி நகரும்? அப்பா! நல்ல வேளை, அவர் கிளம்பி விட்டார். திரும்பும் பொழுது ஒரு பார்வை ஐயோ அப்பா! என் உடலையும் கூட இழுத்துச் செல்லப் பார்த்ததே"

இந்திரன் சந்திரன் என்றெல்லாம் புகழ்ந்தாள் அருணா. சிறு பெண் எவனோ ஒரு வாலிபனைக் கண்டு ஏமாந்துவிட்டாள்.

"என் அன்பை அவருக்கு அளித்து விட்டேனே."

இதென்ன வேடிக்கை. அருணாவிற்கு என்ன தெரியும்? அதுவும் அன்பென்றால் என்ன தெரியும்? அளித்துவிட்டாளாம். என்ன அன்பென்றால் தின்னக்கூடிய தின்பண்டம் என்று நினைத்தாளா? அவனுக்கு ஈடே அழகில்

கிடையாதாம். ஆமாம். அழகைப்பற்றி அவளுக்கு ரொம்பத் தெரியுமில்லையா? அதையும் பாட்டு என்று எண்ணியிருக்கவேண்டும். அவளுக்குத் தெரிந்தது பாட்டுத்தானே.

ஆமாம் அவளைச் சொல்லிப் பயன் என்ன? அருணாவின் அழகிற்கு ஈடே கிடையாது என்று நான் சொல்லவில்லையா? உங்களைக் கேட்டால், "குட்டையாய்க் கொழு கொழு என்று இருக்கிறாளே அவள்தானே அருணா?" என்று அலக்ஷ்யமாய் வர்ணித்து விடுவீர்கள். 'கொடிபோல் மெல்லிய நல்லாள்' என்று கவிகள் வர்ணித்த எலும்பும் தோலுந்தானே உங்களுக்குத் தெரியும்? உண்மையில் அருணா குட்டையில்லை. உயரமும் இல்லை. இப்பொழுது இருப்பதுபோல் அவள் இருந்தால்தான் அழகு, இல்லையென்றால் விகாரம் என்றுதான் நான் சொல்வேன். அவள் மேலுள்ள அன்பு என்னைக் குருடாக்கி விட்டது என்பீர்கள். அப்படியானால் அருணாவை அடையவேண்டும் என்று அநேகர் தவங்கிடப்பானேன்? ஆனால் ஒருவரும் மறுக்க முடியாத விஷயம். மிருது என்றால், வெல்வெட்டு ரோஜா மலர் என்று உளறுவீர்கள். உண்மையில் மிருது என்றால் அருணாவின் உடல் போல் என்றுதான் வர்ணிக்க வேண்டும். ஏன், எனக்கா தெரியாது? என் மேல் எவ்வளவு தடவை சாய்ந்திருப்பாள்? என் மடியில் அவள் உட்கார்ந்திருந்ததற்குத்தான் கணக்காவது உண்டா? அதிருக்கட்டும், நீங்கள் கூறியபடி அதிகமான அன்பால் ஒருவேளை அருணாவின் கண்கள் குருடாகிவிட்டனவோ? கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது. ஆனால் நல்லவர்களின் மனது தவறானதில் செல்லாது. என் அருணாவின் மனது நிச்சயமாய்த் துச்சத்தை நாடாது.

* * *

மாதங்கள் சென்றன. ஆறு மாதங்கள் தங்கள் கடமையை முடித்தன. இதற்குள் சிவகுமாரை அடிக்கடி கச்சேரிகளில் சந்தித்தாள் அருணா.

"குமார்"

சரிதான். இவ்வளவு தூரம் வந்து விட்டதா? சிவகுமார் இப்பொழுது குமார் ஆகிவிட்டானா?

"அவர் மேல்தான் எனக்குப் பிரியம் அதிகம்"

அடேயப்பா. அப்படி அவனிடம் எதைக் கண்டாயடி அம்மா, அவன் மேல் அதிகப் பிரியம் கொள்ள?

"மற்றவர்கள் போல் அவர் இல்லை"

போட்டாளே ஒரு போடு. அவனும் ஒரு புருஷன்தானே? அவனுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்யாசமோ?

"அப்பா, பெண்ணென்றால் போதும். ஆண்கள் மதியிழந்து அவர்களையே சுற்றுவார்கள். அதுவும் கண்ணால் பார்க்கக் கூடிய பெண்ணென்றால் கேட்கவும் வேண்டுமா? கச்சேரி முடிந்ததும், என்னைச் சுற்றிக் கொண்டு, முகத்தில் அசடு வழிய, தத்துப்பித்தென்று பிதற்றும் ஆண் பித்துக்களை நான் எவ்வளவு கண்டிருக்கிறேன்? அதில் தவறிப் பிறந்தவர் குமார்."

சரிதான் முற்றிப்போச்சு. தத்துவ, மனோதத்துவ, ஜீவதத்துவ, ஏன், இன்னம் பாக்கி இருக்கும் சாஸ்திரங்களைக் கரைகண்டவள்போல்தான். இந்த மனித இல்லை, ஆடவ சிரேஷ்டன் எப்படி



ஆணாகத் தவறிப் பிறந்தானோ, இல்லை, ஏன் பிறந்தானோ?

"இதுவரை என்னுடன் ஒரு வார்த்தை பேசி இருப்பாரா? ஒருவேளை பேசி யிருந்தால், நான்தான் பதில் அளித் திருப்பேனா? மற்றவருடன் ஸஹஜ மாய்க் கூச்சமில்லாது பேசுகிறேன். ஆனால் அவரைக் கண்டதும் ஏன் என் வாய் ஸத்தியாக்ரஹம் செய் கிறது? அவருடன் பேச வாய் கூசு கிறது. வெட்கமாக இருக்கிறது. உடல் நடுங்குகிறது. மௌனத்தால் தான் என் அன்பை நான் வெளியிடு கிறேன். அப்பா! அதுவாவது முடி கிறதே".

பாருங்கள் ஐயா, பதினைந்து வயதுப் பெண் ஒருத்தி கூறுவதை! காணாத தைக் கண்டதுபோல் பேசுகிறாள். பரமனை நேரில் கண்ட பக்தன் கூட இவ்வளவு உற்சாகமாயும், உள்ளன்புட னும் பேசமாட்டான். ஆனால் ஒன்று.

"பெண்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமானால், வாலைக் குழைத்துக்கொண்டு நாய்போல் பெண்களைச் சுற்றி அசடு வழியக் கூடாது. என் குமார்போல் இருக்க வேண்டும்."

இது அருணா செய்யும் உபதேசம். ஆனால் அருணாவைப்போன்ற பெண்க ளிடம்தான் இது பலிக்கும் என்பது நான் அந்த உபதேசத்திற்குச் செய்யும் பாஷ்யம்.

* * *

பேய்களின் நடமாட்டம் மறுபடியும் ஆரம்பித்தது. கெடு முடிந்து அருணா விற்குப் பதினாறு வயது ஆகிவிட்ட தல்லவா, நாராயண அய்யங்கார், நாம கிரிச் செட்டியார், அருணாசலம் அய்யர், சுப்பிரமணிய பிள்ளை ஆகியவர், அருணா வின் மானத்தை வாங்கப் போட்டி யிட்டனர். ஆனால் குமாரிடம் பறி கொடுத்த உள்ளத்தை அவர்கள் பெறு வது எவ்விதம்? சுந்தரிக்குக் கூடக் குமாரிடம் ஒரு தனி மதிப்பு.

"அவர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்னாரானால் என் அருணாவைச் சந்தோஷத்துடன் அவருக்கு அளித்துவிடுவேனே."

சுந்தரி இவ்விதம் வெளிப்படையாகக் கூறியது அருணாவை ஆனந்தக்கட லில் ஆழ்த்தியது. ஆனால் குமார், தன் வாயைத் திறந்தால்தானே? விஷயம் தெரியாது சுந்தரி இறங்குவாளா? நல்ல பணக்காரன், படித்தவன். லக்ஷ ரூபாய்க்கு மேல் சொத்திருக்கிறது. தாய் தகப்பன் இல்லை. மணமும் ஆக வில்லை. இம்மாதிரி மனிதர் அகப்படு வது கடினம்தானே? ஆனால், குமாரின் குலம் என்ன என்பதுதான் அவளுக் குத் தெரியாத விஷயம். இந்தக் கேள்வி கேட்டவருக்கெல்லாம், "ஜாதி இரண் டொழிய வேறில்லை" என்று குமார் பாடினான் என்பதைத்தான் அவள் அறிந்துகொண்டாள்.

(தொடரும்)





# போனதுபோல் வந்தான் புது மாப்பிள்ளை

[திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்த்ரி]

சுந்தரேசனுக்கு சுந்தரியை மணம் செய்துகொள்ள வேண்டும் என்று மிகுந்த விருப்பம். அவன் உயர்தரப் படிப்பை முடித்துக்கொண்டு நியாயவாதியாக மாயூரத்தில் தொழில் நடத்த ஆரம்பித்தான். சுந்தரியின் தந்தை ஈச்வரய்யர் பெரிய மிராசுதார். அந்த ஊரில் அவர் வெகு விபவமாக வாழ்ந்து வந்தார். வெண்மையான அடையவளைந் தான் வேஷ்டியும், மல் ஜிப்பாவும், சரிகைக் கரைமட்டும் வெளியில் தெரியும் அங்கவஸ்திரமும், வெள்ளிப் பிரம்பும், வயிரக் கடுக்கனும் தானாகவே அவர் 300 வேலி சொந்தக்காரரான பெரிய மிராசுதார் என்று விளம்பரம் செய்தன. அவருடைய இளமைப் பருவத்தில் இரண்டு வெண்மையான பெரிய மாடுகளின் சலங்கை ஜில் ஜில் என்று குலுங்க பெட்டி வண்டியில் ஏறி உட்கார்ந்து பவனி வருவதைப் பார்ப்பதே ஊராருக்கு ஓர் உற்சாகம். அவருக்கு சங்கீதத்தில் வெகு பிரியம். பிரியம்மட்டும் அல்ல. நல்ல ஞானம். ஞானம் மட்டும் அல்ல. அவரே நன்றாக பாடும் திறமை வாய்ந்தவர். அவர் வீட்டிற்கு அடிக்கடி புகழ் பெற்ற சங்கீத வித்வான்கள் வருவார்கள். அவரும் அவர்களை நன்கு ஆதரித்து திறமை அறிந்து மெச்சிக்கொள்ளும் சக்தி உள்ளவர். ஆகையால் அவர் வீட்டில் எப்பொழுதும் சங்கீத மயமாகவே இருக்கும். சுந்தரிக்கும் மிகவும் மெல்லிய இனிமையான சாரீரம். அவன் படிப்பில் தேர்ச்சி அடைந்ததுபோல் பாட்டிலும் ஒப்பற்ற தேர்ச்சி அடைந்தாள். அவளுடைய பாட்டைக் கேட்டுப் பெரிய சங்கீத வித்துவான்களே பிரமித்துப் போவார்கள். படிப்பு பாட்டுமட்டும் அல்ல. நல்ல அழகும் களையுமுள்ள புன்முறுவல் பூத்த முகம். மோகனமான சிவப்பு நிறம். அழகு வாய்ந்த நெருங்கிய கூந்தல். கருணையும் கவர்ச்சியும் விளங்கும் கண்கள். பொருத்தமான உயரம். அவளைக் கண்டால் காதல் கொள்ளாத யுவன் இருக்க முடியாது. ஆனால் சுந்தரேசன் தந்தை சுந்தரமய்யரோ வெகு ஏழை. இது தவிர அவருக்கும் ஈச்வரய்யருக்கும் வேலித் தகறார் ஏற்பட்டுத் தீராத விரோதம். பக்கத்துப் பக்கத்து வீடுகள்தான். ஆனால் இருவரும் இருந்த உலகங்கள் வெவ்வேறுஉலகங்கள்போலதான். சுந்தரேசனுடைய நல்ல புத்தி, நன்னெறி, சிறந்த பறந்த நோக்கம், உலகத்திற்குத் தொண்டாற்றவேண்டும் என்ற பேராசை, தன்னிடத்தில் அவன் வைத்திருந்த உண்மையான அளவு கடந்த காதல் சுந்தரிக்குத் தெரியும். அவளுக்கும் அவனிடத்தில் உண்மையான அன்புதான். ஆனால் உலகத்தில் ஆசைப்பூர்த்தி அதிகமா? ஆசை பங்கம் அதிகமா? சுந்தரேசனுக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏறிக்கொண்டே வந்தது. ஒருநாள் ஏகாந்தமாகக் கோயில் பிராகாரத்தில் அவளைச் சந்தித்தான். ஆசை வெட்கமறியாது என்றபடி சம்பிரதாயத்தை மீறி அவளை ஒரு வார்த்தை கேட்கவும் கேட்டான்.

"என் மனதின் நிலையைச் சொல்ல வெட்கமாயிருக்கிறது. ஆனாலும் தவரத்தை அடக்கமுடியவில்லை. எனக்கு உன்னை மணம் செய்துகொள்ளவேண்டும் என்ற பேராசை பலிக்குமா?" என்றான்.

அவளும் மிரண்ட விழியுடன் அன்பும் கனிவும் உள்ள பார்வையுடன் "ஈச்வரிக்குத்தான் தெரியும். என் இஷ்டம் என்ன பிரயோஜனம்" என்றாள். இந்தப் பேச்சுடன் அவர்கள் பிரிந்தார்கள்.

சுந்தரேசன் மனம் இடிந்தவனாக ஆனான். இது நடுவில் பொதுஜனத் தொண்டு செய்ததின் மூலமாக அதிகாரிகளுடைய விரோதமும் ஏற்பட்டது. சில காலம் சிறையிலிருந்து பிறகு வெளியில் வந்தான். தொழிலில் இருந்த ஊக்கமும் குறைந்தது. வருவாயும் இறங்கிக்கொண்டே வந்தது. அவன் தாய்தந்தைகளும் காலகதியாக இறந்தார்கள். பட்ட காலிலேயே படும் கெட்ட குடியே கெடும் என்றபடி உலகத்தில் இன்பமேயின்றித் துன்பம் நிறைந்தவனானான். சுந்தரேசன் இல்லறமே வேண்டாம் துறவறம் பூண்டு சன்யாசியாகப் போய்விடுவதாக நிச்சயம் பண்ணி ஓர் இரவு ஒருவருக்கும் சொல்லாமல் புறப்பட்டான். அந்தத் தெருவில் ஒரு சிறுமி "போனதுபோல் வந்தானாம் புது மாப்பிள்ளை" என்று வேடிக்கையாகப் பாடிக்கொண்டிருந்தாள். சுந்தரேசன் அதைக்கேட்டுத் தன்னையும் அறியாமல் சிரித்தான். வெறுப்பு ஒருபக்கம் சிரிப்பு ஒருபக்கம். இப்படி இருட்டோடு இருட்டாக ஊரைவிட்டு சுந்தரேசன் போய்விட்டான்.

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கின்றது. கடவுளுடைய எண்ணமோ வழியோ சிற்றறிவு உள்ள நமக்கு என்ன தெரியும்? நடையாகவே சென்று அனேக தீர்த்தங்களில் நீராடி அனேக க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்த பிறகு காசிக்குப் போய் அவ்விடத்தில் ஓர் உத்தம சந்யாசி இடத்தில் சந்யாசம் பெற்றுத் தவத்திலும் தியானத்திலும் காலத்தைக் கழித்துவிட நினைத்தவன் தெய்வச் செயலாகப் பம்பாய் போய்ச் சேர்ந்தான். அவ்விடத்தில் அவனுடைய நண்பன் ஒருவனை மாதுங்காவில் சந்தித்து அவனுடன் சில காலம் தங்கினான். அந்த நண்பன் பெயர் நாராயணன். அவன் ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்தான். நாராயணனும் அவன் மனைவி லக்ஷ்மியும் அவர்கள் சிறு குழந்தை மீனாட்சியும் வெகு இன்பமாக இல்லறம் நடத்தி வந்தார்கள். சுந்தரேசனைத் தம்பி மாதிரியே நாராயணன் நடத்தினான். சுந்தரேசனுடைய நிலையைக் கண்ட நாராயணன் பரிதபித்து அவன் மனதிற்கு ஆறுதல் உண்டாகும் முறையாக நடந்து கொண்டான். தன்னுடைய வாழ்க்கை இன்பம் முறிந்து போய்விட்டாலும் உலகத்தின் இடத்தில் இருந்த வெறுப்பு கொஞ்சம் குறைந்தது. அந்த சமயத்தில் அந்தப் பெரிய ஊரில் பஞ்சத்தின் கொடுமையால் அடுத்த வீட்டில் ஒரு பிராமண ஸ்த்ரீயின் கணவன் ஊரைவிட்டு ஓடிப் போய்விட்டான். அவளோ அரிசி பங்கீடுத் தாள் (Ration card) இருந்தும் பணம் இல்லாத கொடுமையால் பட்டினியாய் இறந்தாள். அவளுடைய இரண்டு குழந்தைகளும் அனாதைகளாகத் தவித்தன. சுந்தரேசன் மனமிரங்கி அவைகளை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற உறுதி கொண்டான். அந்த எண்ணத்தை நாராயணனிடம் அறிவித்தான்.

"நாராயணா! உன் மாதிரி சுகமான இல்லற வாழ்வு எனக்கு ஜாதகத்தில் இல்லை. ஆனால் இந்தத் துன்பம் நிறைந்த உலகத்தை வெறுப்புடன் தள்ளிவிட்டு ஒழிந்த மனத்துடன் கடவுளையே நாடித் தவம் செய்ய உறுதி கொண்டுவந்த எனக்குப் பள்ளத்தில் போகும் நீரைப்போல் இந்தத் திக்கற்ற குழந்தைகளை எப்படியாவது பாதுகாக்க வேண்டும் என்று பிடிவாதமாகத் தோன்றுகிறதே. இது என்ன விபரீதம்" என்றான்.

நாராயணன்: "இதுவும் கடவுள் லீலைதானே? அன்புதானே கடவுள்? உன் மனதின் நாட்டம் நன்மை என்றே நான் நினைக்கின்றேன்" என்றான்.

கொஞ்சநாள் அந்த ஊரிலேயே இருந்து அந்த ஊரில் ஒரு தினசரி

பத்திரிகைக்கு நிருபராக அமர்ந்து அந்த வருவாயைக்கொண்டு அந்தத் திக்கற்ற குழந்தைகளைக் காப்பாற்றி வந்தான். அவன் உயர்ந்த புத்திசாலி ஆனபடியால் அந்தப் பத்திரிகையின் அதிபர் அவனைப் பத்திரிகைத் தொழிலிலேயே முன்னுக்கு வரும்படி செய்ய கல்கத்தாவில் பெரிய தினசரிபத்திரிகை அதிபரான தன் நண்பருக்கு அறிமுகப் படுத்தி அங்கே அந்தப் பத்திரிகையின் உபபத்திரிகை அதிபர் வேலை கொடுக்கும்படி செய்தார். சுந்தரேசன் இரண்டு அனாதைக் குழந்தைகளுடன் அங்கே போய்ச் சேர்ந்தான். இல்லறவாழ்வே அற்றுப்போனதாகக் கருதின அவனுக்கு இரண்டு குழந்தைகளுடைய சம்ரக்ஷணம் ஏற்பட்டது.

அப்பொழுது கல்கத்தா பஞ்சக் கொடுமையில் அகப்பட்டு அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்த சமயம், கிராமங்களில் அரிசிப்பஞ்சம் ஏற்பட்டு ஜனங்கள் “கெட்டும் பட்டணம் சேர்” என்ற பழமொழிப்படி கல்கத்தாவிற்குத் திரள்திரளாகவந்து குவிந்துகொண்டிருந்தார்கள். அந்த ஒப்பற்ற “அரண்மனைகள் நிறைந்த நகரம்” என்று புகழ்பெற்று லக்ஷ்மி தாண்டவமாடிக்கொண்டிருந்த பட்டணம் சாக்காடாக மாறிவிட்டது. சில குழந்தைகள் தாய் தந்தைகளை இழந்து வருந்துவதைக் கண்ட சுந்தரேசன் அவைகளையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். இப்படி சுந்தரேசன் குடும்பம் பெருகிக்கொண்டே வந்தது. அந்தக் குழந்தைகளைக் கவனித்துக் காப்பாற்றுவது பெரிய பாரமாக ஏற்பட்டது. ஆனால் அவனுடைய கருணையானது அந்த சுமையைப் பெரியபளுவாகப் பாராட்ட அவன் மனதிற்கு இடங் கொடுக்கவில்லை.

கல்கத்தாவின் நிலை மிகவும் கேடாக இருந்ததால் சென்னைசெல்ல அவன் நிச்சயம் செய்தான். சென்னை “ஹிந்து” பத்திரிகையில் அவன் மனுவின்மேல் ஒரு வேலையும் கிடைத்தது. அவன் மனுப் போட்டதற்கு முக்கிய காரணம் “ஹிந்து” பத்திரிகை விளம்பரங்களில் “அவயாம்பாள் ஹிந்து அனாதாலயம். திக்கற்ற குழந்தைகளுக்கு வசதியும் அன்னவஸ்திரங்களும் அளிக்கப்படும். பூவிருந்தமல்லி ஹைரோட், 64 நம்பர் வீடு, காரியதரிசி, சுந்தரி” என்ற விளம்பரம்தான். ஏதோ தன்னுடைய நோக்கத்துடன் கூடின கருணாமூர்த்தியான பெண்மணி இருப்பதைக் கண்டவுடனே பட்டணம் போய்ச் சேர வேண்டும் என்ற ஆத்திரம். வெகுநாளாகத் தன் நாட்டை விட்டுத் தன் மொழியைவிட்டுத் தன் சுற்றத்தார்கள் நண்பர்களை விட்டுத் தூர தேசம் போனால்தான் தன் நாடு தன் மொழி தன் சுற்றத்தார் நண்பர்களுடைய அருமை அறிய முடியும். கன்றைவிட்டுப் பிரிந்த பசுவைப்போல் ஓடோடி சுந்தரேசன் தன் அனாதைக் குழந்தைகளுடன் சென்னை வந்து சேர்ந்தான்.

இதன் நடுவில் சுந்தரியின் நிலை எப்படி ஆயிற்று? சுந்தரியை ஆயிரம் வேலி மிராசுதார் ஒருவர் பிள்ளைக்கு மணஞ் செய்ய அவள் தந்தை முயற்சி செய்துகொண்டிருந்தார். ஆனால் திடீரென்று மாரடைப்பால் இறந்தார். பிறகு சுந்தரி காலேஜில் படிக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததால் அவள் தாயார் அவளைப் பட்டணத்திற்கு அழைத்துச் சென்றாள். காலேஜ் படிப்பு முடிந்து பரீக்ஷையில் விசேஷ கௌரவத்துடன் தேர்ச்சி பெற்றாள். ஆனாலும் சுந்தரேசனிடத்தில் இருந்த அன்பு வளர்ந்துகொண்டே இருந்தது. சுற்றத்தார் அவளை மணம் செய்துகொள்ள வற்புறுத்தியும் அவள் இசையவில்லை. “அபயாம்பாள் ஹிந்து அனாதாலயம்” என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அவள் தாயும் அவளும் அதை நடத்திவந்தார்கள்.

சுந்தரேசன் பட்டணம் வந்து பத்திரிகை ஆலயத்தில் வேலையை ஒப்புக்கொண்டு தன்னுடன் இருந்த குழந்தைகளை அனாதாலயத்தில் சேர்த்துவிடலாமா என்று யோசித்தான். சுந்தரி

யாராக இருக்கக்கூடும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. தன் காதலி சுந்தரிக்கு வெகு வருஷங்கள் முன் மணமாயிருக்கும் என்று அவன் எண்ணம். திக்கற்ற சில குழந்தைகளை அனாதாலயத்தில் சேர்க்க விரும்புவதாகவும் அதற்காக அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருவதாகவும் கடிதம் எழுதிவிட்டு அன்று அங்கே குழந்தைகளுடன் சென்றான். சுந்தரியைப் பார்த்தவுடன் பிரமித்துப் போனான். பழைய நினைவுகள், வெட்கம், அன்பு, ஆச்சர்யம். அவன் மனதில் ஒன்றை ஒன்று தாக்கிப் போராடிக்கொண்டிருந்தன. சுந்தரி தான் அவன் மனக்குழப்பத்தை மாற்ற முதல் முதலாகப் பேசவேண்டி ஏற்பட்டது.

"என்னை அடையாளம் தெரியவில்லையா? இப்படி காட்டில் புலியைக் கண்டதுபோல் மிரண்ட பார்வை ஏன்?" என்று சிரித்த முகத்துடன் கேட்டாள். அவனும் கலீரென்று சிரித்தான். பழக்கமில்லாமல் தூர விலகி இருப்பவர்களைச் சேர்ப்பதில்சிரிப்புக்கு இணை ஒன்றும் இல்லை.

"புலி என்ற உவமை பொருத்தமா? மனிதர்கள் நடுவில் எதிர்பாராதபடி தேவியைக் கண்டால் மிரண்ட பார்வை ஏன் இருக்காது" என்று உரைத்தான்.

"அதிருக்கட்டும். இக்குழந்தைகள் யார்? எது குடும்பம் பெரிதாயிருக்கின்றதே" என்றாள்.

"என் குடும்பத்தைவிடப் பெரிய குடும்பம் இங்கே இருப்பதாகத் தோன்றுகிறதே" என்று பதில் கூறினான்.

இப்படிப் பேசி வெட்கம் கூச்சம் குறைந்து பழக்கம் ஏற்படவே இருவரும் தங்களுக்கு இருவருக்கும் ஏற்பட்ட சம்பவங்களை அறிந்துகொண்டார்கள். தொழில் நடத்துவதும் பணஞ் சேர்ப்பதும் உண்பதும் உறங்குவதும் சண்டை செய்வதும் சமாதானமாவதும் நோய்வாய்ப்பட்டு இறப்பதும் என்ற சாதாரண சம்பவங்கள் நிறைந்த வாழ்நாளில் அன்போ அத்புதமோ ஆனந்தமோ இல்லாமல் பிறப்பை வீணாகச் செய்வதுதானே நாம் உலகில் பார்க்கிறோம்? ஆனால் இந்த இரு காதலர்கள் இளமையிலேயே விசேஷமான சம்பவங்களை அனுபவிக்க நேரிட்டது.

சுந்தரி தாயாரும் சுந்தரேசன் மாமனும் சுந்தரேசன்-சுந்தரி மணம் விஷயமாகப் பேசி முடித்து மணம் சுந்தரியின் வீட்டிலேயே நடந்தது. சுந்தரேசன் முன்போல் மாயூரத்திலேயே நியாயவாதி வேலையில் இருக்க நிச்சயித்தான். அவனும் சுந்தரியும் 'அபயாம்பாள் அனாதாலய" த்தை மாயூரத்திலேயே ஸ்தாபித்தார்கள். சுந்தரேசனுடன் கூட வந்த குழந்தைகள் அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தன. மணம் நடந்த சில தினங்களுக்குப்பின் தம்பதிகள் உல்லாசமாக மாடியில் இருந்தபொழுது "போனதுபோல் வந்தானும் புது மாப்பிள்ளை " என்று முன் பாடின சிறுமி குறும்பாகப் பாடிக்கொண்டிருந்தாள். சுந்தரேசன் அந்தப் பாட்டைக் கேட்டவுடன் நகைத்தான். சுந்தரி அதற்குக் காரணம் கேட்கவே தான் ஊரைவிட்டு சந்யாசியாகப் போக கள்ளிருட்டில்போய்க்கொண்டிருந்த தருணத்தில் அந்தப் பாட்டு தன் காதில் விழுந்து தன்னைத் திடுக்கிடச் செய்த விஷயத்தைச் சொன்னான். சுந்தரியும் ஆச்சர்யமும் ஆனந்தமும் ஒளி வீசும் கண்களுடன் அவனைப் பார்த்துத் தன் பார்வை மலர்களாலேயே அவனுக்கு மண மாலை மறுபடியும் சூட்டினாள். காதலர் இருவர் கருத்தொத்து ஆதாவு பட்டதே இன்பம்.

# வேண்டுதலை

[வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.]

அந்த ஊருக்கு ஆற்றங்கரைதான் 'பீச்சு', 'பார்க்கு' எல்லாம். 'முனிஸிபாலிடி'யாகாவிடினும் அந்த வட்டாரத்தில் அது ஒரு பெரிய 'யூனியன்'. அப்பொழுது பெருகியதுபோலவே அவ்வூரின் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு போனால் இன்னும் ஐந்து வருஷங்களில் அதுவும் ஒரு முனிஸிபாலிடியாகிவிடுவது நிச்சயம் என்று அவ்வூர் வாசிகள் பெருமையடிப்பார்கள். மற்றபடி அவ்வூருக்குத்தான் என்ன குறைவு? அது ஒரு தாலூக்காவுக்குத் தலைநகரம். ஹைஸ்கூல், டெபுடி கலெக்டர் ஆபீஸ், முன்சீப் கோர்ட்—எனவே வக்கீல்களின் கூட்டம்—இவையெல்லாம் அவ்வூரில் உண்டு. சமீபத்தில் ஏற்பட்ட 'பைகாரா' அணையினால் மின்சார விளக்குகள்கூட அங்கு ஏற்பட்டுவிட்டதென்றால் அப்புறம் என்ன வேண்டும்? இவ்வளவிருப்பினும் ஊர் ஜனங்கள் பொழுது போக்குவதற்கென்று அங்கு தோட்டங்கள் - பார்க்குகள் மட்டும் ஏற்படவில்லை, ஆனால் இது ஒரு குறையாக அவ்வூர் மக்களுக்குத் தோன்றவில்லை. ஏனெனில் ஊரையடுத்து ஓடும் நதியாகிய இயற்கை வசதியிருக்கையில் செயற்கை வசதிகள் எதற்கு? எனவே மாலை வேளைகளில் பொழுது போக்குவதற்காக அவ்வூரார் அவ்வாற்றங்கரைக்குத்தான் போவது வழக்கம். இவ்வழக்கத்திற்கேற்ப ஜானகிராமனும் துரைசாமியும் அன்று ஆற்றங்கரைக்குப் போகப் புறப்பட்டனர்.

வழியில் ஒரு மூங்கில்தோப்பு உண்டு. அதனருகில் அன்று ஒரு பெரிய ஜனத்திரள் கூடியிருந்தது. பறை முதலிய கிராம்மிய வாத்தியங்களின் ஓசையும் ஜனங்களின் பல்வகைக் கூச்சல்களும் சேர்ந்து இவர்களை அங்குச் சற்றுத் தங்கும்படிச் செய்தன.

கூட்டத்திற்குக் காரணம் அங்குள்ள திரௌபதியம்மன் கோயிலில் நடந்து வந்த உற்சவமும் அதையொட்டி அங்கு நடக்கவிருந்த நெருப்பு மிதித்தல் என்னும் விழாவுமே என்பதைப் பக்கத்திலுள்ளோரிடம் கேட்டறிந்தனர்.

நெருப்பு மிதித்தல் என்னும் சம்பவத்தை அவர்கள் இருவரும் அதுவரையில் கண்டிருக்கவில்லை. கிராம வாசத்திலும் அதையடிப்படையாயுள்ள வாழ்க்கையிலும் பற்றுள்ள துரைசாமிக்கு இவைகளில் நம்பிக்கையுண்டு. மேனாட்டு நாகரிகத்தில் மோகமுற்ற ஜானகிராமனுக்கு இவைகளில் நம்பிக்கையில்லாமலிருந்ததுடன் இத்தகைய வழக்கங்களை அவன் பரிகசித்தும் வந்தான். துரைசாமியின் தூண்டுதலின்பேரில் அவனும் அந்நெருப்புமிதித்தலைப் பார்க்க அங்கே தங்கினான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஆறு அடி நீளமும் மூன்று அடி அகலமுமுள்ள விஸ்தீர்ணத்தில் பரப்பப்பட்ட நெருப்புத் தணலின்மேல் தலையில் கரகங்களை ஏந்தியவர்களும், பாலரும், விருத்தர்களும், நடுவயதினருமான பத்துப் பன்னிரண்டு பேர்கள் முதன் முதலில் கொஞ்ச நேரம் முழங்காலளவுத் தண்ணீரில் நின்றிருந்துவிட்டுப் பின்பு ஒரே ஓட்டமாய்த் திரௌபதியம்மன் பெயரை உரக்கச் சொல்லிக்கொண்டவண்ணம் நெருப்பின்மேல் மிதித்து ஓடினர். சுற்றிலுமுள்ள ஜனங்கள் அவர்கட்கு உற்சாகம் உண்டாக்குவதற்காக அம்மன்பேரில் தோத்திரப் பாட்டுக்களைச் சொல்லி ஆரவாரித்தனர்.

திரௌபதிபோன்ற கிராமதேவதைகளிடத்திலும் பக்திபூண்ட துரைசாமி

இதைக் கண்டு வியந்தான். இம்மாதிரிச் செய்வதென முன்பே வேண்டிக்கொண்டிருந்து பின்பு வேண்டுதலேயை நிறைவேற்றிய அந்தப் பக்தர்களை மெச்சினன். ஜானகிராமனுக்கோவெனில் இவையொன்றும் ரசிக்கவில்லே. எல்லாம் மூடக் கொள்கைகள் என்று ஏளனமாய்ப் பேசினன்.

அச்சமயத்தில் கூட்டத்தின் ஒரு மூலேயில் சற்றுக் கலவரம் ஏற்பட்டது. என்னவென்று விசாரித்ததில் அங்கு ஒருவன்பேரில் திரௌபதியம்மனின் ஆவேசம் வந்ததாகவும் அவ்வருஷத்திய கொண்டாட்டத்தினல் தான் திருப்தியடைந்ததாகச் சொன்னதாகவும் பின்னர்க் கற்பூரம் கொளுத்திக் கையில் வைக்கப்பட்டவுடன் அதையுட்கொண்டு அம்மன் 'மலேயேறிய' தாகவும் தெரிந்து கொண்டனர். ஜானகிராமனுடைய பரிகசிப்பை இது அதிகரிக்கச் செய்தது.

## 2

இச்சம்பவங்கள் முடிந்ததும் இருவரும் ஆற்றங்கரைக்குப் போனர்கள். ஆற்று மணலில் வழக்கம்போல் உட்கார்ந்தனர். அன்று மாலே அங்கு அவர்களிடையே நடந்தேறிய சம்பாஷணையும் மேற்கூறிய சம்பவங்களேக் குறித்தே யிருந்ததும் இயற்கையே. அது வருமாறு :—

ஜானகிராமன் :—உண்மையில் இந்த மூட நம்பிக்கைகளே நீ நம்புகிருயா ?

துரைசாமி :—ஏன் ? நம்புவதில் என்ன தப்பிருக்கிறதென்றுதான் எனக்குத் தெரியவில்லே ?

ஜா :—விஞ்ஞானப் பயிற்சியில் நாம் பல துறைகளில் அபிவிருத்தியடைந்திருக்கும் இந்த இருபதாம் நூற்றுண்டிற்கூடவா இம்மாதிரிக் கொள்கைகளில் நம்பிக்கை வைப்பது ?

து :—இல்லாவிடில் அவர்கள் அவ்வளவுபேரும் நெருப்பு மிதித்தார்களே—அது அவர்களுக்கு எப்படி சாத்தியமாயிற்று ?

ஜா :—அப்படிக் கேள், சொல்லுகிறேன். அவர்கள் நெருப்பு மிதிப்பதற்கு முன் கொஞ்சநாழி ஜலத்தில் கால்களே நனைத்துக்கொண்டு நின்றூர்களே, அதை நீ கவனித்தாயா ?

து :—பார்த்தேன், அதற்கென்ன ?

ஜா :—அதுதான் சொல்லப்போகிறேன், அவசரப்படாதே. ஜலத்தில் நனைந்த காலுடன் நெருப்பை மிதிக்கவே, உள்ளங்காலில் ஒட்டிக்கொண்டிருந்த தண்ணீர் நெருப்பின் வெப்பத்தினல் நீராவியாக மாறி, பாதத்திற்கு ஓர் உறை போட்டாற்போல் ஆகிவிடுகிறது. இந்த ஆவியினலாகிய உறைதான் அவர்களுடைய பாதங்களே வெந்து போகாமல் காக்கிறது.

து :—சற்றுப் பொறு. நீ சொல்லுவது விபரீதமாயிருக்கிறதே. பாதத்தைக் காப்பாற்றும் உறை நீராவியென்றுல் அந்த ஆவியின் சூடே காலேப் பாதிக்காதா ? விஞ்ஞானத்திலும் விதண்டாவாதத்தைக் கொண்டு புகுத்துகிருயே ! அதிருக்கட்டும், அந்த ஆவியின் உறையினல் பாதத்திற்கு உஷ்ணமே உரைப்பதில்லே யென்கிருயா ?

ஜா :—உஷ்ணமே இராதென்று நான் சொல்லவில்லே. முன்னுடி நீரில் பாதத்தை நனைத்துக்கொள்ளுவது உஷ்ணம் பாதத்தையதிகமாய்ப் பாதிக்காமல் காப்பாற்றுகிறது என்றுதான் நான் சொல்லவந்தது.

து :—ஆகையால் நீ சொல்லுகிறபடியே, அந்நீராவியின் உஷ்ணத்தையாவது பொறுத்துக்கொள்ளவேண்டாமா? அதுதான் எப்படி இவர்களுக்குச் சாத்தியமாகிறது?

ஜா :—அதைச் சகித்துத்தான் தீர வேண்டும். மூட நம்பிக்கையினல் தூண்டப்பட்டு இம்மாதிரி காரியங்களில் இறங்கினல், அதனல் வரும் விபத்துக்களேயும் அனுபவிக்கவேண்டியதே !

து :—அதைத்தான் அம்மன் செய்து கொடுக்கிருள் என்று இவர்கள் நம்புவதில் உனக்கு என்ன ஆக்ஷேபணை ? அம்மன்பேரில் பாரத்தைப் போட்டு

விட்டு அந்தப் பக்தியில்தான் தங்கள் பாதத்திற்கு ஏற்படும் வெப்பத்தையும் இவர்கள் பொறுத்துக்கொள்ளுகிறார்கள் என்றால் அதில் தப்போ, ஆச்சரியமோ, பரிகசிக்கக் கூடியதோ என்னவிருக்கிறது ?

ஜா :—சரி, அது எப்படியோ போகட்டும். இந்த 'ஆவேசம்' வந்ததென்கிறார்களே, அதையும் நீ நம்புகிறாயா ? அப்படி நம்புவது சுத்த, வடிகட்டின, மூட நம்பிக்கை யென்று ஏத்துக்கொள்ளுவாயா ?

து :—அது மூடக்கொள்கை யென்பதற்குச் சரியான ருசு கிடைக்கும்வரையில் அதை ஏளனஞ்செய்ய நமக்கு ஒரு வித உரிமையுமில்லை யென்றுதான் நான் சொல்லுவேன்.

ஜா :—இதுதான் உனக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம். இருவரும் மேனாட்டுப் படிப்பில், எம்.ஏ. படித்துக் கரைகண்டவர்கள் தான். ஆனால் நீ என்னைப்போல் நம்முடைய சுய அறிவை, யுக்தியை, பிரயோகித்து விஷயங்களை ஆராயாமல் இருக்கிறாய். நானோ, இச்சமாசாரங்களில் யுக்தியின் முடிவையே உண்மையென நம்புவேன்.

து :—நம் சமய புத்திக்கே எல்லாம் எட்டிவிடுகிறதா ? நம்முடைய புலன்களின் சக்தி எவ்வளவு குறைந்தது என்பதற்கு இரண்டே உதாரணங்கள் சொல்லுகிறேன் கேள். சூரியனின் வெளிச்சத்தை நம் கண்களைக்கொண்டே நிர்ணயிக்க நமக்கு யோக்கியதையில்லை. கண் கூசுகிறது. நாம் வசிக்கும் பூமி சதா தன்னைத்தானே சுற்றிக்கொண்டேயிருக்கிறதென்று உனக்குத் தெரியும். அப்படிச் சுற்றுகையில் ஒரு பெருத்த சப்தம் ஏற்படுகிறது. ஆனால் அப்பேரொலியை அறிய நம் காதுக்குச் சக்தியில்லை. இம்மாதிரி புலன்களை வைத்துக்கொண்டு நாம் எல்லா விஷயங்களையும் எவ்வாறு அறியமுடியும் ? நம் யுக்தியும் இதே மாதிரியே.

ஜா :—நீ எதற்கும் அசையமாட்டாய் என்று எனக்குத் தெரியும். நாகரிகம் முதிர்ந்த மேனாடு முதலிய விடங்களில் இத்தகைய மூடக்கொள்கைகளை ஒரு நாளும் நம்பமாட்டார்கள் !

து :—அங்கும் அநேக மூடக் கொள்கைகள் இல்லாமலில்லை. அவர்களுக்கும் சகுனம், அசுபம் எல்லாம் உண்டு. பதின்மூன்று என்பது அவர்களுக்கு ஓர் அதிர்ஷ்டமற்ற எண்ணும். முழுக் குதிரை லாடம் அதிர்ஷ்டத்தைக் கொடுக்குமாம். ஆனால் இதெல்லாம் மேனாட்டு நாகரிகத்தில் மோகங்கொண்ட உன்போன்றவர்களுக்குப் புலப்படாது. அவர்கள் எது செய்தாலும் அது நல்லதாகத்தான் தோன்றும். அதிருக்கட்டும், அவர்களில் கற்றறிந்த சிலர் இறந்தவர்களுடைய ஆவிகளுடன் பேசுவது, அவைகளைக் கொண்டு ஒரு யந்திரத்தின் மூலம் குறி கேட்பது முதலியவைகளில் நம்பவில்லையா ? இதுவும் நம் 'ஆவேசம்' போன்றதுதானே ?

ஜா :—நீ என்ன சொன்னாலும் சொல். இந்த வேண்டுதலே, 'ஆவேசம்' முதலிய விஷயங்களில் மட்டும் நான் ஒருநாளும் நம்பிக்கை வைக்கமாட்டேன்.

அத்துடன் அச்சம்பாஷணை முடிந்தது. சூரியனும் அஸ்தமிக்கவே, இருவரும் எழுந்து வீட்டை நோக்கித் திரும்பினர்.

## 3

இச்சம்பவங்கள் நடந்து சுமார் ஒரு வருஷம் இருக்கலாம். ஜானகிராமன் வீட்டில் ஒரே கூட்டம். அங்கு ஊரிலுள்ளோர் எல்லோரும் சாப்பாட்டிற்காகத் திரண்டிருந்தனர். அன்று அவ் வீட்டில் வேங்கடாசலபதி சமாராதனை. சமீபத்தில் திருப்பதிக்குப் போய் வந்ததால் ஜானகிராமனின் பெற்றோர்கள் அச்சமாராதனைக்காக ஊராரெல்லோரையும் அழைத்திருந்தார்கள். ஜானகிராமனும் உடனிருந்தான். தன் மேனாட்டு நாகரிகப் பற்றுதலால் இவைகளில் நம்பிக்கையில்லாவிடினும், வயதான தன் தாய் தந்தையரின் மனத்தைப் புண்படுத்த அவனுக்குச் சம்மதமில்லையாத

லால் தானும் அதில் பட்டும் படாததுமாய் இருந்தான்.

சாப்பாட்டிற்குத் துரைசாமியும் வந்திருந்தான் என்று சொல்வது மிகை. ஏனெனில் ஊரிலுள்ளோரில் அவனும் ஒருவன்தானே? ஜானகிராமன் பூனை போல் அங்கு இருந்ததைக்கண்டு துரைசாமி புன்னகை புரிந்தான். அப்புன் சிரிப்பில் அவனுடைய கொள்கைகளுக்கு மாறாக இச்சம்பவத்தில் அவன் கலந்துகொண்டிருப்பதைக் குறித்துப் பரிகசித்தாற் போல் தோன்றிற்று. ஜானகிராமனும் இவன் குறிப்பை அறிந்தான். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

சாப்பாட்டிற்குமுன் பூஜையும் மாவிளக்கென்று சொல்லப்படும் சடங்கும் நடந்தன. சாஸ்திரிகள் கற்பூர ஆரத்தி செய்து கொண்டிருக்கையில், வீட்டில் புருஷர்கள் நிறைந்திருந்த கூடத்தைச் சார்ந்த ஸ்திரீகள் நின்று கொண்டிருந்த தாழ்வாரத்தின் ஒரு புறத்தில் ஏதோ சத்தம் கேட்கவே எல்லோருடைய கவனமும் அங்கே சென்றது.

"ஊம் மறந்துட்டியாடி? அபசாரம் பண்ணினயாடீ? ஊம்"

என்று சொல்லியவண்ணம் இருபத்தெட்டு வயதிருக்கும் ஓர் இளம் விதவை தன் தலையைச் சுற்றி ஆட்டினதை எல்லோரும் கண்டனர். 'சாலா மாமி' என்று அழைக்கப்படும் விசாலாக்ஷி என்ற பெயர் பூண்ட அந்த அம்மாள் அடுத்த வீட்டுக்காரரின் தங்கை. சிறு வயதில் புருஷனை யிழந்தும் வெகு நெறியாக வாழ்ந்து வந்தவள். சிறிது மாந்திரிகமும் அவளுக்கு தெரியுமாம். கிராமத்திலுள்ளோர்கட்கு அவள் ஒரு வைத்தியராய் விளங்கினாள். கட்டி, கடி (அதாவது தேள், பாம்பு இன்னும் சில்விஷங்கள் இவைகளால் உண்டாவது), பேய்சொரி, காமாலை முதலியவைகட்கு மந்திரித்து சிகித்ஸை செய்வாள். அவள்பேரில் சிற்சில சமயங்களில் 'சாமி'யும் வரும். இப்பொழுது திருப்பதி வேங்கடாசலபதி பெருமாள் அவள் பேரில் ஆவேசித்து அவளை அப்படிப் பேச வைத்தார்.

'சாமி வந்த'வர்களுடன் பேச்சுக் கொடுத்து விஷயத்தை கிரகித்துக் கொள்ள ஒரு தனி சாமர்த்தியம் வேண்டும். அது எல்லோருக்கும் வராது. சிலர் 'சாமி வந்த' பேர்வழியை அணுகவே பயப்படுவார்கள். அவ்வூரில் அக்காரியத்தைச் சாதிப்பவள் எதிர்சாரியில் கோடி வீட்டைச் சார்ந்த மங்களம் என்னும் முதிய சுமங்கலிதான். அக்கூட்டத்தில் அவளும் இருந்ததால், சாலா மேற்கூறியபடிப் பேசியதும், மங்களம் உடனே முன்வந்து சாலாவுடன் அடியிற்கண்டவாறு சம்பாஷித்தாள்.

மங் :—ஏண்டியம்மா, என்ன அபராதம் நடந்துடுத்து? சொல்லேன். தெரியாத தான் நடந்திருக்கணும் சொல்லு, பரிகாரம் செய்யறோம்.

சாலா :—வெள்ளி நாக்கு பண்ணி என் உண்டிலே போடறேன்னு வேண்டிண்டாடி, போடலே.

மங் :—யாரு, என்ன, எப்போன்னு விபரமா சொல்லு. உடனே செலுத்தறோம்.

சாலா :—அவதான். இந்த வீட்டுக்காரிதான். ஏமாத்திட்டா. ஊம்—

மங் :—ஞாபகமில்லேடீம்மா, ஞாபகமில்லே. நான் போடச்சொல்றேன். எப்ப வேண்டிண்டான்னு கொஞ்சம் சொல்லேன்.

சாலா :—எப்பவா? கேளு, சொல்றேன். அவொ பிள்ளை ஜானகிராமன் ஏழு வயசாயிருக்கச்சே, ஒருநாள் பள்ளிக்கூடத்திலேருந்து ஆத்துக்கு வந்து, பள்ளிக்கூடத்திலே அன்னிக்கு தனக்கு வாய் குளறித்துன்னு சொன்னான். அதுக்காக வாத்தியார் அடிச்சாருன்னு சொல்லி அழுதான். உடனே அவொ, என் பேரைச் சொல்லி இப்படி வேண்டிண்டாடீ."நாக்கு சரியாப்போயி கொளறாம பேச வந்தா, என் உண்டிலே ஒரு வெள்ளியாலே செஞ்ச நாக்கு பண்ணி போடறே"ன்னு சொன்னாடீ. அப்படிச் செய்யல்லே.

மங் :—மன்னிச்சுக்கணம். உடனே அவாளை நான் இதைச் செலுத்தூட்டு மறுவேலை பாக்கச் சொல்றேன். வேறு ஒண்ணும் அபராதமில்லையேம்மா?

சாலா :—ஊம் ஊம்—இல்லை.

இதைச் சொன்னவுடன் ஆவேசம் வந்த ஸ்திரீ தன் கையை நீட்டினள். ஒரு கட்டி கற்பூரம் ஏற்றி அவள் கையில் வைத்தனர். உடனே அதை வாயிற் போட்டுக்கொண்டு விழுங்கி விட்டு, கண்ணை மூடிக்கொண்டு, மயக்க மாய்க் கீழே உட்கார்ந்தாள்.

ஜானகிராமனின் தாய்தந்தையருக்கு இந்த வேண்டுதலை செய்ததாகவே நினைவு வரவில்லை. எப்படி இருந்தும், ஸ்வாமியே நேரில் வந்து சொல்லியிருக் கையில் அதை எப்படி மறப்பது? ஆகையால் அவ்வூரில் சில தினங்களில் திருப்பதி யாத்திரை போகவிருந்த ஒருவர் மூலம் அதைச் செலுத்திவிடுவதென்று தீர்மானஞ் செய்ததுடன், உடனுக்குடனேயே அதற்கு உத்தேசமாய்ச் சிலவாகும் என்று தோன்றிய தொகையாகிய ரூபாய் பத்தையும் ஒரு மஞ்சள் துணியில் முடிந்து வைத்தார்கள். அதற்கப்புறம் சமாராதனை சிறப்பாய் நடந்தேறியது.

சாப்பாடு முடிந்து வெளியேறுகையில் துரைசாமி ஜானகிராமனைப் பார்த்து, "என்னப்பா, அன்று நெருப்புமிதியின் போது ஆவேசம் வந்ததைப்பற்றிப் பரிகாசம் செய்தாயே, இன்று நடந்ததே உங்கள் வீட்டிலேயே. இதற்கென்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

"இதெல்லாம் அவர்கள் காரியம். இதற்கு நானு பாத்தியம்?" என்று ஜானகிராமன் பதிலளித்தான்.

## 4

இது நடந்த ஒரு வாரத்திற்கெல்லாம் துரைசாமி ஏதோ காரியத்திற்காக ஜானகிராமன் வீட்டிற்குப் போயிருந்தான். போன காரியம் முடிந்தவுடன் இருவரும் லோகாபிராமமாக ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். ஜானகிராமன் வைத்தவிடந் தெரியாமலிருந்த ஒரு வஸ்துத்தைத் தேடிக்கொண்டிருந்தான். அப்பொழுது வெகு நாட்களாகத் தன் தகப்பனாருக்கு வந்து குவிந்து கிடந்த கடிதங்களைப் புரட்டி அவைகளில் உபயோகமில்லாதவைகளைக் கிழித்தெறிந்து கொண்டிருந்தான். அவைகளுக்கிடையில் பழுப்பு நிறமாய் மாறியதும் பதினைந்து வருஷத்துக்கு முன்பு எழுதப்பட்டதுமான ஒரு பழங் கடிதத்தைக் கண்டு ஜானகிராமன் திடுக்கிட்டான். துரைசாமி என்னவென்று கேட்கவே, அதை அவனிடம் காட்டினான். காலஞ் சென்ற ஓர் உறவினரிடத்திலிருந்து ஜானகிராமனுடைய தகப்பனாருக்குப் பலவாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட அடியிற் கண்ட கடிதமாயிருந்தது அது :—

"அநேக நமஸ்காரம். க்ஷேமம். உபயகுசலம்.........குழந்தை ஜானகிராமனின் வாய்க் குழறல் விஷயமாய் அம்மாமி செய்த வேண்டுதலையைச் செலுத்த எவ்வளவு சிலவு ஆகும் என்று இங்கிருக்கும் தட்டா ஞெருவனைக் கேட்டேன். அவன் கூலியுட்பட பத்து ரூபாய்க்குள் முடியும் என்று சொன்னான். இன்னும் இரண்டு மூன்று தினங்களில் வேறு சிலரையும் கலந்து இது விஷயமாய்த் திரும்பவும் உங்களுக்கு எழுதவேன்........"

இதைக் கண்டதும் ஜானகிராமன் முகத்தில் ஒரு பெரிய ஆச்சரியக் குறி தோன்றிற்று. துரைசாமிக்கு அச்சமயத்தில் அதைப்பற்றி அவனை ஒன்றும் கேட்க மனம் வரவில்லை!

# சிலா சாசனம்

[எம். என். ரங்காச்சாரி, எம்.ஏ., எம்.எல்.]

தமிழ் நாட்டின் தற்கால தாழ்மையின் ஒரு சின்னமாக இருக்கிறது நம்மிடை சரித்திர உணர்ச்சியே இல்லாமல் இருப்பது. நாட்டு வரலாற்றை ஆராய வேண்டும், அதை தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆவலோ அக்கரையோ நமக்கு இல்லை. தமிழ் நாட்டு சரித்திரமே கோர்வையாக இதுவரை எழுதப் படவில்லை. ஆராய்ச்சிதான் இல்லை என்றால், ஆராய்ச்சிக் கருவிகளைத்தான் அழிக்காமல் இருக்கிறோமா? நாச வேலையைச் செய்ய எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

சரித்திர ஆராய்ச்சிக்கு சிலா சாசனங்கள் எவ்வளவு உதவியாக இருக்கின்றன. என்பது ஆராய்ச்சியாளர்களுக்கு நன்றாய்த் தெரியும். மன்னர்கள் வரலாறு, நாட்டின் நிலை, அரசியல் பொருளாதார ஸ்தாபனங்கள், இலக்கியம், கலைத்திறன், மக்கள் மனப் பண்பு, எத்தனையோ விஷயங்களை சிலா சாசனங்களால் அறியலாம். நமது அதிர்ஷ்டம் சாஸனங்கள் ஆயிரக்கணக்காகத் தமிழ் நாட்டுக்கோவில்களில் வெட்டப்பட்டிருக்கின்றன. அதுவும் அழியாத கற்களின் மேல் அவைகளைத் திரட்டி ஆராய்ந்தால் எவ்வளவோ உபயோகமாக இருக்கும்.

நமது முன்னோர்கள் மேதாவிகள். எவ்வளவோ கவனத்தோடுதான் சாசனங்களைப் பொறித்தார்கள். அவைகளை பாதுகாத்தும் வந்தார்கள். ஒரு கோவிலை புதுப்பித்தால் அதிலுள்ள சாசனங்களைப் பதிவு செய்துகொண்டு புதிய கோவிலில் பொறித்து வைப்பார்கள். அவ்வளவு மரியாதை. அவ்வளவு சிரத்தை. கோவில் தானங்கள் மட்டும் அல்ல, நாட்டில் நடந்த விசேஷ சம்பவங்கள், அரசரின் வீரச் செயல்கள், அருமையான பாடல்கள், தனி மனிதர்களுடைய வியவகாரங்கள்கூட, கற்களில் பொறித்து வைத்தார்கள். சிலா சாசனங்களில் இருக்கும் அரசரின் 'மெய்க் கீர்த்தி' களில் இருந்துதான் எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து கொண்டு இருக்கிறோம்.

அவர்கள் மேலான நிலையில் இருந்தார்கள். இன்று நாம் தாழ்மையின் அடிவாரத்தை அடைந்துவிட்டோம். நமது அறியாமையும், அடிமைத்தனமும் எல்லாத் துறைகளிலும் பரவி இருக்கிறது. சரித்திர அறிவு இல்லை. சாசனங்களின் பெருமையும் தெரியவில்லை. அவைகளை அழிப்பதில் முனைந்திருக்கிறோம். கோவில் நிர்வாகமே சீர்கெட்டு, பக்தியும், வணக்கமும் வியாபாரப் பொருள்கள் ஆன பிறகு மதிப்பில்லாத சாசனங்களை மதிப்பவர் யார்? கோவில் நிர்வாகிகளுக்குப்பதவிச்சண்டைகளுக்கேநேரம் இல்லை. கோவிலை வகிக்கும் திறமையும் இல்லை. ஆசையும் இல்லை. பொருள் விளங்கா சாசனங்களைப்பற்றிக் கவலைப் பட நேரம் ஏது அவர்களுக்கு?

உயர்ந்த நோக்கத்தோடு கோவிலைப் புதுப்பிக்கிறார் பணக்கார பக்தர். ஆனால் பழைய வழக்கங்களும் அவருக்குத் தெரியாது. புதிய முறைகளிலும் அவருக்கு நம்பிக்கை இல்லை. சாசனங்களைப் புதுப்பிக்க அவகாசமும் இல்லை, மனமும் இல்லை. எத்தனை அருமையான சாசனங்கள் இப்படி அழிந்திருக்கின்றன? காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவில், ஜம்புகேஸ்வரம், திருப்புகலூர், திருவண்ணாமலை-எத்தனை கோவில்கள், எத்தனை சாசனங்கள்?

அரசாங்கம் அசிரத்தையாக இருக்கிறது. ஹிந்துமத பரிபாலன சங்கத்தார் நோக்கமும் சரிவர திரும்பவில்லை. சரித்திர ஆராய்ச்சியாளர் உழைப்பும் போதாது. சரித்திர மாணவர்களுக்கும் இவ்விஷயத்தில் இன்னும் ஊக்கம் பிறக்கவில்லை. இந்த நிலைமை மாறுவது எப்பொழுது? நாட்டுக் கலைகளிலும், சரித்திரத்திலும் பற்று உண்டாகும் காலம் எது? தமிழ்நாட்டிற்குக் கதி மோட்சம் உண்டா? தமிழர்கள்தான் பதில் சொல்லவேண்டும்.




# ஒப்பந்தம்

[ல. ரா. விசுவநாத சர்மா, கீரனூர்]

ஓர் ஊரில் ஒரு பிரபு இருந்தார். அவருக்கு நிரம்ப நிலபுலன்கள், மாடு கன்றுகள், வீடு, தோப்புக்கள் எல்லாம் உண்டு. அவர் எங்கு சென்றாலும் பல்லக்கில்தான் செல்வது வழக்கம். அதைச் சுமந்து செல்ல நான்கு போயிகள் உண்டு. அவர்களுக்கு உணவு, உடை எல்லாம் கொடுத்து நிறையச் சம்பளமும் அளித்து வீட்டோடு வைத்துக் கொண்டிருந்தார் பிரபு. அந்த போயிகள் ரொம்பவும் நல்லவர்கள். ஆனால் படிக்காதவர்கள். அதனால் சில துர்க்குணங்கள் இயற்கையாக அவர்களிடம் படிந்திருந்தது. தங்களுக்குள்ள வேலையைக் குற்றமில்லாமல் செய்வார்கள். அதிகப்படி வேலை ஏதாவது சொன்னால் செய்யமாட்டார்கள். மனிதர்களுக்கு ஒரு சமயம் போது ஏற்படாதா? அப்படிப்பட்ட சமயங்களில் யாரும் உதவுவது கிடையாதா? பிரபுவின் போயிகளிடம்மட்டும் அந்த சுபாவம்கிடையாது.

பிரபுவுக்கு இரண்டு மூன்று மைல்களில் நிலம் இருந்தது. அறுவடை சமயம். பண்ணை வேலையாட்கள், வீட்டு வேலைக்காரர்கள் எல்லோரும் அறுவடைக்காகச் சென்றிருந்தனர். பிரபுவும் பல்லக்கிலமர்ந்து அறுவடை நடக்கும் இடத்திற்குப் போய் இருந்து விட்டுப்பகல்பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்கு வந்தார். வீட்டில் அவர் மனைவியைத் தவிர யாருமில்லை. பிரபு வந்ததும் மனைவி அவரிடம் பசுவின் கன்று எங்கோ ஓடிப் போய்விட்டதாகவும் தேடிப் பிடிக்க ஆள் இல்லையென்றும் கூறினாள். போயிகளைத் தவிர அங்கே யாருமில்லாததால் அவர்களை ஏவும்படி மனைவியிடம் கூறிவிட்டு ஸ்னானம் செய்யச் சென்றார் பிரபு. அதன்படி பிரபுவின் மனைவியும் போயிகளையழைத்து கன்றைத் தேடிப் பிடித்துவரக் கட்டளையிட்டாள். போயிகள் மறுத்துவிட்டனர். பிரபுவிடம் தெரிவித்தாள் யசமானி. அவர் கோபம் கொண்டார். தானே நேரில் உத்தரவிட்டார் பிரபு. அப்பொழுதும் மறுத்தனர் போயிகள். "எங்களுக்குப் பல்லக்குத் தூக்குவது தான் வேலையே தவிர கன்றைத் தேட வேண்டிய அவசியமில்லை" என்றனர். பிரபுவின் கோபம் எல்லையைக் கடந்தது. போயிகளுக்குப் புத்தி புகட்ட எண்ணினார். சீக்கிரமாகப் போசனம் முடித்து பல்லக்கில் ஏறிக்கொண்டு போயிகளைத் தூக்கச் சொன்னார். பகல் ஒரு மணியிலிருந்து அஸ்தமிக்கும் வரையில்பல்லக்கைத் தூக்கிக்கொண்டு பிரபு உத்தரவிடும் திசைகளிளெல்லாம் ஓடினர் போயிகள். அவர்களுக்கு மிகவும் களைப்பாய்ப் போய்விடவே பிரபுவைக் கெஞ்சினார்கள். "அதெல்லாம் முடியாது, கன்றைத்தேட வேறு ஆளில்லாததால் நானே தேட ஆரம்பித்திருக்கிறேன். அதைத் தேடிப் பிடித்துக்கொண்டுதான் இரவு வீடு திரும்பவேண்டும். உங்களுக்குத்தான் கன்று தேடும் வேலையில்லை. நீங்கள் பல்லக்கைத் தூக்குங்கள் நான் பல்லக்கில் உட்கார்ந்தபடி கன்றைத் தேடுகிறேன்" என்றார் பிரபு.

மூடர்களான போயிகளுக்கு அப்பொழுதுதான் தெரிந்தது தங்கள் தவறுதலும் எசமானனின் சூழ்ச்சியும். உடனே பல்லக்கைக் கீழே இறக்கி வைத்துப் பிரபுவைப் பணிந்து தங்கள்

# என் விடுமுறை வைபவம்

[ஆர். வி. எஸ். மணி, கல்யாணி ஹோம், திருக்காட்டுப்பள்ளி]

ஆராயும்கடலில் என்னை ஆழ்த்திய புத்தக ஆசிரியர் கூறிய சொற்கள் என் மனத்தை விட்டு அகலவில்லை. அவர் கூறிய சொற்கள் யாது என நீங்கள் வினவலாம். அவர் கூறிய சொற்கள் சிறியனவே. ஆனால் உட்கருத்து பெரியது. பெரியது எனில் நீளம், அகலத்தில் குறிப்பிடத்தக்கது அல்ல. அவர் கூறிய சொற்கள் : 'நான் ரயிலில் சொன்னது சரியாய்ப்போய்விட்டது என்பதே !'

நான் இதை ஆராய்ந்து பார்த்ததில் அவர் இச்சொற்களைக் கூறிய சந்தர்ப்பத்தின்படி இப்போது சென்னை இருக்கும் நிலைமை என்று ஒருவாறு உணர்ந்தேன்.

“பட்டிக்காட்டான் புகைவண்டியைப் பார்த்துப் பிரமித்துப் போய்விட்டான்” என்பது நம்மவர்கள் இயற்றிய ஒரு மொழி. இம்மொழிக்கு ஒப்ப நான் பட்டிக்காட்டான் எனக் கூறுதலில் ஐயமில்லை. நான் அநேகம்தடவை சென்னைக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் ஒரு முறையாவது சென்னை இப்பொழுது இருக்கும் நிலைமையில் நான் அதைக் காணவில்லை.

நான் திருக்காட்டுப்பள்ளியில் கல்வி பயின்று கொண்டிருந்தேன். அங்கு கால்வருஷப் பரீட்சையை (Quarterly Examination) எழுதிவிட்டு விடுமுறை நாட்களைச் சென்னையில் கழிக்கலாம்என்றஉத்தேசத்துடன்சென்றேன்.

நான் கிராமத்திலிருந்து பட்டினம் வந்திருக்கிறேன். (மேற்கூறிய பழமொழிக்கொப்ப) மேகம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது போன்றிருக்கிறது.

நான் வந்ததுமுதல் ஐந்து நாட்கள் விடாமல் மழை. மழை என்று கூறினால், சிறிய துளிகளா? அல்ல. பெரிய மழை. வாய்க்கால்கள், குளங்கள், ஏரி முதலியவை நிரம்பிவிட்டன. ஏரியில் பல இடங்களில் உடைப்பு. நகரத்தில் பல முக்கிய வீதிகளில் இடுப்பு அளவு தண்ணீர் இருந்தது. இவைகளுள் ஒன்றே எனக்கு வருத்தத்தைக் கொடுத்தது.

அது யாதெனில் மண்ணைப் புரட்டிக்கொண்டு ஓடும் இம்மழை மனிதனையும் புரட்டிக்கொண்டு ஓடுமோ? நான் நேரில் கண்டதைக் கூறுகிறேன். பல குடிசைகள், பல மனிதர்கள், இன்னும் பல வேறு சாமான்கள், ஆடுமாடுகள், முதலியவை தண்ணீரில் மிதந்துகொண்டிருந்தன. ஆண்டவனுக்குக் கண் இல்லை என்றே கூறவேண்டும். எவ்வளவு கோரம் !

இவ்வளவு இடையூறுகளுக்கும் நடுவில் டிராம் வண்டி கிடையாது. பஸ் கிடையாது. இப்பஞ்ச தினங்களாக டிராம்வண்டித் தண்டவாளங்கள் துருப்பிடித்துவிட்டன எனக் கூறலாம். ஒன்று இரண்டுக்குமேல் பஸ்கள்

---

குற்றத்தை ஒப்புக்கொண்டு இனிமேல் இப்படி நடந்துகொள்வதில்லையென்றும் கன்றைத் தாங்களே தேடிப்பிடிப்பதாகவும் இறைஞ்சினர். பிரபுவும் அவர்களை மன்னித்து வீடு திரும்பினர். பல்லக்குடன் அவரை வீட்டில் கொண்டுவந்து சேர்த்துவிட்டுப் பின் போயிகள் நால்வரும் நாலா திசைகளிலும் சென்று கன்றைத் தேடினர். சற்று நேரத்தில் அது அகப்பட்டுவிடவே “அடாடா ! அப்பொழுதே இதைக் கண்டு பிடித்திருந்தோமானால் பகல் பூராவும் அனாவசியமாகப்பல்லக்கைச் சுமந்துகொண்டு அலைந்திருக்க வேண்டியதில்லையே ! நம்முடைய மதியீனம்தான் காரணம்” என்று தம்மைத்தாமே நொந்து கொண்டனர்.

அன்றுமுதல் அவர்கள் எந்த வேலை சொன்னாலும் தட்டுவதில்லை. அதனால் எசமானனின் விசுவாசம் அதிகரித்தது. சம்பளமும் அதிகம் கிடைத்தது.

செல்லவில்லை. ஒவ்வொரு பஸ்ஸிலும் புளிமூட்டைகள்போல் நூறு பேர்கள் அடைபட்டிருந்தனர்.

என் விடுமுறை நாட்கள் முடிந்து விட்டன. ஊருக்குச் செல்லலாம் எனக் கிளம்பினேன். ரயில் ஓடவில்லை என்றனர். இவை ஒரு பக்கம் இருக்க, தண்ணீருக்குப் பஞ்சம்; தண்ணீர் குழாயில் வரவில்லை. விளக்கில்லை!

ஒரு திருடன் ஒரு பொருளைத் திருடி விட்டு ஓடிக்கொண்டிருந்தான். அவன் போகும் பாதையில் ஒரு கார், அவன் கால் மேல் ஏறிவிட்டது. இதன் காரணமாக ஆஸ்பத்திரியில் சில காலம் கஷ்டப்பட்டான். அவன் திருடன் எனச் சிலர் உணர்ந்து சிறையில் இட்டனர். அங்கே சில காலம் கஷ்டப் பட்டான். பிறகு அவனைத் தூக்கில் இடவேண்டும் என ஆக்கினை பிறந்து விட்டால் எவ்வளவு கஷ்டப்படுவான்! ஒரு சிறிய புழுவை ஒருவன் மிதித்து விட்டால் அது எப்படித் துடிக்குமோ, அதுபோல் துடிப்பான். இதற்கெல்லாம் காரணம் அவன் முன்பு செய்த குற்றமே.

இதைப்போல் இவ்வளவு இடையூறுகளுக்கு மத்தியில் வெடிகுண்டு விபத்து. சில ஆட்கள் விண்ணுலகம் எய்தினர். இது எவ்வளவு கோரம் எனச் சிந்தித்துப் பாருங்கள்.

நான் முன் கூறியபடி அவர் கூறிய சொற்களை ஆராய்ந்து பார்த்ததில் எனக்குத் தோன்றியது மேற்கூறியதே.

ஆசிரியருடைய கருத்து என் கருத்தினின்றும் வேறுபட்டிருக்கலாம். ஆனால் நான் அதைக் குதர்க்கமாக (Half knowledge is always dangerous) எடுத்துக்கொண்டிருப்பதற்கு அவர் சினங்கொள்ளமாட்டாரென்று நினைக்கிறேன்!



வேண்டுமென்றே உங்களை அவர்கள் குறி பார்க்கவில்லை


ஆனால் அவதிப்படும் துர்பாக்கியசாலிகளில் ஒருவராக நீங்கள் ஆகலாம். தலைவிதி அப்படி இருந்தால், நீங்கள் அந்தக் கொடுமைக்கு ஆளாவதிலிருந்து தப்ப முடியாது. ஆனால் நீங்கள் இன்ஷூரன்ஸ் மூலம் உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றிவிட முடியும்.

விவரங்களுக்கு எழுதுக:

நேஷனல் இன்ஷூரன்ஸ், கம்பெனி, லிமிடெட்.,
7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா
மதராஸ் பிராஞ்சு:—362, சைனா பஜார் ரோட், எஸ்ப்ளனேட், சென்னை.

# புஸ்தக விமர்சனம்

**கதைக் கோவை :—** (மூன்றாம் தொகுதி - பிரசுரகர்த்தர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: கிளேஸ் - ரூ. 7 - 8 - 0. ஆண்டிக் ரூ. 9 - 0 - 0).

அல்லயன்ஸ் கம்பெனியார் தமிழ் நாட்டுக்குச் செய்யும் பெருந்தொண்டுகளில் கதைக்கோவை வெளியிடுவது ஒன்றாகும். முதல் தொகுதிகளிரண்டிலும் வெளிவராத 60 ஆசிரியர்கள் எழுதிய 60 சிறுகதைகள் இத்தொகுதியில் வெளியாகி யிருக்கின்றன. மகாகனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியவர்கள் ஆங்கிலத்தில் மட்டும் மேதாவியல்ல தமிழிலும் எளிய நடையில் மிகவும் ரஸமாகக் கதை எழுதும் சக்தி வாய்ந்தவர் என்பது இப்புத்தகத்தில் அவர் எழுதியிருக்கும் 'பங்காளிக் காய்ச்சல்' என்ற கதையிலிருந்து தெரியவருகிறது. மேலும் தமிழ்ப் புலமை வாய்ந்த மகாமகோபாத்யாய பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை, சுத்தானந்த பாரதியார் முதலியவர்களும், மற்றும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களான 'புதுமைப் பித்தன், நாடோடி, ரா. வேங்கடராமன், டாக்டர் வே. ராகவன், மஞ்சேரி ஈஸ்வரன் முதலியர்களும், ஸ்ரீமதிகள் தங்கம்மாள் பாரதி, மோ. ஸ்ரீ. செல்லம், எம். எஸ். கமலா முதலிய பல பல ஸ்திரீகள் எழுதிய கதைகளும் மற்றும் பலருடைய கற்பனைச் சித்திரங்களும் இப்புத்தகத்தை மணக்கச் செய்கின்றன. ஸ்ரீமான்கள் ஈசுவரன், புதுமைப் பித்தன் மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் இவர்கள் எழுதியிருக்கும் கட்டுரைகள் மிகவும் போற்றக் கூடியன.

காகிதப் பஞ்சம் மிகுந்த இக்காலத்தில் தமிழ்நாட்டுக்குச் சேவை செய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு, உயரிய பதிப்பில் இவ்விதமான கோவைகளை வெளியிட்டுவரும் அல்லயன்ஸ் கம்பெனியாரைப் போற்றாமலிருக்க முடியாது. இந்த நல்ல முயற்சிக்குத் தமிழ் மக்களின் ஆதரவு அபிரிதமிதமாகக் கிடைக்குமென்றும் நாங்கள் நம்புகிறோம்.

**வீரசக்தி:—** கோயம்புத்தூரிலிருந்து மாத மிருமுறை வெளிவரும் பத்திரிகை. திரு. வி. கலியாணசுந்தர முதலியார், பரலி சு. நெல்லையப்பர், பூவலூர் சுந்தரராமன், க. நா. சுப்பிரமணியம் முதலியவர்கள் இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்து வருகிறார்கள். மற்றும் ரஸமான தொடர் கதைகளும், கவிதைகளும் இதில் வெளிவருகின்றன. காகித பஞ்ச காலத்தில் இதன் ஆசிரியர் ஸ்ரீ கோ. நீ. அண்ணாமலை சிறிதும் மனத் தளர்ச்சியின்றி இப்பத்திரிகையை கண்களைக் கவரும் கவர் பேஜ்களை உடுத்தி நடத்தி வருவது பாராட்டத் தக்கதே. (தனிப்பிரதி விலை 0-4-0)

---

**தமிழிசைப் பாடல்கள் :—** (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் பிரசுரிக்கப் பெற்றன. மூன்றாம் தொகுதி.)

இதில் அடங்கிய கீர்த்தனைகள் 75. நீலகண்டசிவன், ஸ்ரீ டி. லக்ஷ்மணபிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி, அச்சுததாஸர் அவர்கள், வேதநாயகம் பிள்ளை, அருணாசலக் கவி—ஒவ்வொரு கீர்த்தனைகளும் ஸ்வரப்படுத்திப் போட்டிருப்பது பொதுஜனங்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். ஸ்ரீ லக்ஷ்மண பிள்ளையவர்கள் ஸ்வரப்படுத்திப் போட்டிருப்பதில் அநேக மாறுதல்கள் இப்புஸ்தகத்தில் காணப்படுகின்றன. பாட்டாந்திரம் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். அச்சுததாஸர் கீர்த்தனைகளை யாரும் அநேகமாகப் பாடுவதில்லை. இப்புஸ்தகத்தில் அவைகள் வெளியிடப்பட்டிருப்பது போற்றத்தக்கது. அதேமாதிரி கோபாலகிருஷ்ண பாரதியார் கீர்த்தனைகளும் ஸ்வரப்படுத்தி வெளியிடப் பட்டிருக்கின்றன. ஒரு கச்சேரியில் முழுக்க முழுக்க தமிழ்க் கீர்த்தனங்களே பாடுவதற்குப் போதுமான உருப்படிகள் இருக்கின்றனவென்பதை இப்புஸ்தகம் ருசுப்படுத்துகிறது. தமிழிசைக்காகத் தொண்டுபுரியும் அண்ணாமலை சர்வகலாசாலையார் தங்கள் முயற்சியில் வெற்றி பெறுவார்களாக.




*சோப் பாக் செய்பவர் சொல்லுகிறார் . . .*

"அழுக்கடைந்த வஸ்திரங்களை சுலபமாக வெளுப்பதற்கு "சுயமாக வெளுக்கும் நுரை" உதவுகிறது. எனக்கும் என்னுடன் வேலை செய்வோருக்கும் ஸன்லைட் சோப்பை உபயோகப் படுத்துவதால் இது நன்றாகத் தெரியும். ஆடைகளில் இருக்கும் அழுக்கைத் தானாகவே போக்கக்கூடிய சக்திக்கு "சுயமாக வெளுக்கும் நுரை" என்று பெயர். ஸன்லைட் சோப்பின் நுரை வெளுக்கும் வேலையை சிரமமின்றி செய்கிறது. நமது சோப் செய்யும் ரசாயன சாஸ்திரிகள் அதில் 'சுய சக்தி' வாய்ந்த நுரை நிறைய இருப்பதால அவ்வாறு சாத்தியமாகிற தென்கிறார்கள். 'சுய சக்தி' வாய்ந்த சோப் அழுக்கைத் தொட்ட உடன் போக்கிவிடுகிறது."




# ஸன்லைட் சோப்

## சுயமாக வெளுக்கும் நுரை உடையது

இப்பொழுது மெழுகுத் தாளினுல் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது

S. 64-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு




மற்றொரு இந்திய ஞாபகார்த்த சிலை

**மைசூர் சந்தன சோப்**

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்:

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி, பெங்களூர்


Edited & Published by K. S. Venkataramani at No. 34, Alamelu Manga
puram, Mylapore, Madras. Printed by T. V. Volaganatha Mudalia
Sadhu Press, 12, Ganapathy Mudali Street, Royapettah, Madras.